
கவிஞர் பாலரவியின்
எண்ணங்களின்
வண்ணங்கள் (கவிதைத் தொகுப்பு)

# அஞ்சலிகள்

குண்டுகளின் தாக்குதலால்
கதறிடவே உயிர் நீத்து
விண்ணுலகம் சென்றிட்ட
வீரமிகு தியாகிகளே
கண்ணில் நீர் தாங்கிக்
கூறுகின்றோம் அஞ்சலிகள்
மண்ணுலகம் உள்ளவரை
மிளிர்ந்திடுமே உம்புகழும்







# அணிந்துரை

பாச்சுவையும் நாச்சுவையும் பூச்சுவையும்
பொருட்சுவையும் உணர்வுக் கருவாகி
உலகினையணைத்து உயிரோம்பி வாழ்ந்த
தொல்குடித் தோன்றல்கள் நாம்!

செய்யுள் மரபிற் செழித்தோங்கிய செம்மொழியாம்
செந்தமிழின் சிறப்புணர்ந்தோர் இம்மொழிக்கு
இறப்பில்லையென்று ஒத்துக் கொண்டனர்.
ஒத்துக் கொள்ளுவர்.

அவ்வாறான இறைமைகொள் மொழியினை அகத்திருத்தி
அம்மொழியிற் கவி படைப்பவர்கள் வரிசையிற் காலூன்றி
நிற்கின்ற அன்புத்தம்பி பாலரவியின் கவிநூலின்
வரவு கண்டு பெருமகிழ்வடைகின்றேன்.!

கடந்த மூன்று பத்து ஆண்டுகளாக முகிழ்த்தெழுந்த
பாசப்பிணைப்பு அன்று போல் இன்றும் பசுமையாய்ப்
பரவிப் படர்ந்து கிடக்கிறது!

பாலரவியின் தமிழ்ப்பற்றும் தன்னினப்பற்றும்,
தாயகப்பக்தியும் தன்னிகரற்றவை.!
தமிழுள்ளமும் கவியுள்ளமும் கொண்ட தம்பி பாலரவி
அலைஓசை என்னும் இதழோசை மூலம்
எனக்கு நன்கு நெருக்கமாக அறிமுகமாகிய இளவல்.

வோல்தம்ஸ்ரோவின் தமிழ்ப்பாடசாலையில் எங்கள்
தமிழ்க்குழந்தைகளுக்கு தமிழ் கற்பித்து, எமது தமிழ்த்தாய்க்குத்
தொண்டு புரிந்த சிறப்பிற்குரிய இந்தத்தம்பியின் உந்துதலாலும்,
உற்சாகத்தாலும் நானும் இப்பாடசாலைக் குழந்தைகளுக்கு
நாடகப்பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றேன்.

அரங்குகள் தோறும் கவியோசையெழுப்பிக் கரங்கோர்த்துக்கொண்ட என் தம்பி பாலரவியின் கவியுளம் கொட்டிய கவிவரிகள் இன்று நூலாக்கம் பெறுவது கண்டு நெஞ்சு குளிர்கிறேன்.

அன்பும் அறமும் தர்மமும் நிச்சயம் நிலைக்கும் என்ற நம்பிக்கைகளோடும், அதற்கான உயரிய எண்ணத்தோடும் அவ்வெண்ணத்தின் பிரார்த்தனை அதிர்வுகளோடும் இந்நூல் வெளிவருவதாகவே நான் கருதுகிறேன்.

அமிழ்தினை ஒத்த எழில் தமிழ் இருக்க
எளிதினில் ஆங்கிலம் இயம்பிட விரும்பும்
என்னரும் மக்காள்! இனியநற் குழந்தைகாள்!
கன்னல் தமிழ்மொழி பேசிடக் கசப்பதேன்?

என்று எமது பிஞ்சுகள் தமிழ் கற்க வேண்டுமெனக் கவிக்குரல் கொடுக்கிறார் தம்பி பாலரவி.

தமிழ் இலக்கணத்தோடும் இலக்கியத்தோடும் மட்டும் இறுமாப்படைந்து விட்ட மொழியல்ல.

அது வாழ்வியலின் வழிகாட்டி, வையத்தின் நீதி, அறம், அரசு ஆட்சியென அனைத்தும் உரசிப் பார்க்கும் உயர்வேதம்.!

உலகம் ஒன்றாக உயர வேண்டுமென்ற ஒப்பற்ற தத்துவத்தை அழகாகவும் ஆணித்தரமாகவும் எடுத்தியம்பிய இம்மொழியை எமது இன்றைய சந்ததியும் நாளைய சந்ததியும் மறந்து விடக்கூடாதென்ற வேட்கையைத் தம்பி பாலரவியின் கவிவரிகளில் நான் பல தடவை சந்தித்திருக்கிறேன்.

எத்தனை அழகுற ஆங்கிலம் பேசினும்
உந்தனை வெள்ளையர் என்றிடலாமோ?

என்று மிகவும் எளிமையான வரிகளின் வழி தனது இதயத்தின் இலக்கினை எடுத்துக் காட்டுகிறார் தம்பி பாலரவி.

அதே வேளை, நம்மை வாழ வைக்கும் நாடுகள் பற்றியும் நன்றிப்பெருக்கோடு பேசுகிறது இந்தக் கவிஞனின் கவியுள்ளம்.!

வந்தாரை வாழவைக்கும் வளம்மிகுந்த நாடு இது.
சொந்தமற்ற எம்மவரைச் சுதந்திரமாய் வாழவிட்டார்
வெள்ளையனே வீதியிலும் கடைமுன்னும் உறங்குகையில்
எங்களுக்கு வீடு தந்து எதிர்காலம் சிறந்து நிற்க
கையினிலே பணந்தந்து கற்று நிற்கப் பள்ளி தந்து
விளங்காத பாசை தன்னை விளங்கிநிற்க உதவி தந்து
எம் வழக்கைத் தம்செலவில் எடுத்தியம்பி வென்றுநிற்கப்
பச்சைக் கடதாசி மூலம் பணந் தந்து......

எங்கள் மொழி பேசி நிற்க எங்கள் மொழி காத்து நிற்க
எங்கள் மொழி எங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லி நிற்க
அள்ளிப் பணந்தந்தார் யார் தருவார் அவர்போலே...

என்று தனது நன்றிக்கடன் புரியும் தம்பி
அந்த வீச்சுடனே....

வெள்ளையனே உந்தன் வெள்ளைக் குணத்திற்கு
உள்ளம் நிறைய வைத்து அள்ளிக்கவி சொரிவேன்

என்று பாடிச்செல்கிறான்.

தமிழா நீ தமிழா எனும் தலைப்பினில் கீழமைந்த கவிவரிகளில் நமக்குள் நிறைந்துள்ள தாழ்வுநிறைத் தகைமைகள் பற்றி மிகவும் வெளிப்படையாகக் கூறுகிறான் தம்பி பாலரவி.

உன்பின்னால் வருகின்ற இளையவரை நினைத்துப் பார்!
யானைத் தலை தாங்கும் வேழமுகத்தோனை
ஆறுமுகம் தாங்கி அதிரவரும் வேலவனை
ஏளனக்கண்ணோடு எதிர்நோக்கும் பாலர்களை
நீள நினைத்துப் பார் நின் சமரை நிறுத்திவிடு
இளைய தலையோடு இணைத்துவிடு ஆலயத்தை
இளைய தலையோர்க்கு ஊட்டிவிடு மதப்பற்றை
ஆன்மீகம் உள்நுழைய அகன்றோடும் அறியாமை
தீட்டுவது என்கடமை திருந்திடுமா தமிழுலகம்!

என்று கவிக்கடமை செய்கிறது என் தம்பி பாலரவியின் கவிநெஞ்சம்.!

தாயக உறவுகளின் தவிப்பினையும் தாகத்தினையும் தம்பி பாலரவியின் கவிதைகள் என்றுமே தாங்கி வந்துள்ளன.

எமது மக்கள் பாதுகாப்போடும், தமது மொழி, பண்பாடு, கலைகளோடும், அன்பும் அமைதியும், நீதியும் தர்மமும் நிழலாய் நிற்க, நிம்மதியாக வாழ வேண்டுமென்ற அந்த வேண்டுதலும் வேணவாவும், தம்பி பாலரவியின் கவிவாழ்வில் கருவூலமாக நின்றதை நான் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கின்றேன்.

எறும்பினையும் நசுக்குவதை ஏற்காத நெஞ்சம் கவி நெஞ்சம்.
எவர்க்குமே பொல்லாங்கு நினைக்காத பாச நெஞ்சம் பாலவன் நெஞ்சம்.
அதுவும் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்"என்றும்,
"உயர்ந்தோர் மாட்டே உலகு" என்றும் ஓயாது உழைத்த உலகப் பெருமொழியாம் தமிழ் மொழியைப் போற்றும் கவியுளத்தின் வெளிப்பாடு, உலக அமைதியும் அன்பும் என்ற உண்மையைத் தம்பி பாலரவியின் கவிதைகளில் காண முடியும்.

தர்மம் வெல்ல வேண்டுமென்ற தவிப்பு தம்பி பாலவரியின் கவிதைகளில் ஓங்கி ஒலிக்கின்றது.

அனைத்துக்கும் மேலாகத் தன்னை ஈன்ற தாயையும், தனது தந்தை யையும், மற்றும் தன உடன் பிறப்புக்களையும் என்றும் மறவாத இனிய உள்ளம் தம்பி பாலரவியின் உள்ளம் என்பதை நான் பூரணமாக அறிவேன்.!

என் அன்புள்ள அம்மாவுக்கு! என்ற கனிவான கவிமடல் கண்களைப் பனிக்க வைக்கிறது.

இந்த ஆண்பிள்ளையால் எனக்கென்ன பலன் என்று
நீங்கள் நினைத்தீர்களோ!
சாண்பிள்ளை வெளிநாட்டில் சுகித்திருக்க,
அடுப்படியில் ஊதாங்குழல் ஊதிய பெண்பிள்ளைகள்...
என் தங்கையர்
உங்களைச் சைக்கிளில் ஏற்றிக்காப்பாற்றி இருப்பாரே!

என்று தன் தாயையும் தன் சகோதரிகளையும் தழுவிக் கொள்கிறான் தம்பி பாலரவி தவிப்போடு.

உலகம் உண்மையையும் நீதியையும் தர்மத்தையும் அன்பினையும் அறத்தினையும் அச்சாணிப்பண்புகளாக மாற்றும்போது தான் இந்த உலகில் உண்மையான அமைதியும் உறுதியான ஆக்கமும் பிறக்குமென்ற நம்பிக்கையோடு நாமெல்லாம் நிற்கின்ற ஒரு காலகட்டம்

இது. !
வேதனைகள், சோதனைகள், அனைத்தாலும் புடம் போடப்பட்டு நிற்கும்
எமது இதயங்களில் இன்று பிரார்த்தனைகளே கவிவரிகளாக
ஒலித்துக்கொண்டு இருக்கின்றன.

உயர்ந்தோர் எங்கும் உள்ளனர்!
தாழ்ந்தோரும் எங்கும் உள்ளனர்.
இதுவே இதிகாசங்களும் இலக்கியங்களும்
எமக்குப் புகட்டியுள்ள பாடங்கள்.

உயர்ந்தோரின் உணர்வுகள் உயரும்போது
உண்மையும் நீதியும் உயரும்.
சத்தியமும் சாந்தியும் உலகை அணைக்கும்.
அன்பும் அறனும் உலக இனங்களைச்
சகோதரத்துவ நெறியிற் சங்கமமாக்கும்.

புன்னகையும் புரிந்துணர்வும் விருந்தோம்பலும் மீண்டும்
உலக மதங்களையெல்லாம் ஒருமைப்படுத்தும்.
பசித்தோரும் பதைத்து மடிவோரும் இல்லா உலகு உயிர்க்கும்.
பகைமை விலகி பாவங்கள் உருகி
போரில்லா உலகப்பண்பாடு பலப்படும்.

எமது நாளைய சந்ததி நல்லவர் நிழலில் நலமாக வாழ்வர்.
இவைதான் நமது நம்பிக்கைகளாக நிற்கின்றன.
இவைதான் நாளைய உலகக் கவிஞர்களின்
உயிர் நாதமாக ஒலிக்கப்போகிறது.

தம்பி பாலரவி நானும் நீயும் இந்த நம்பிக்கைகளோடு
தொடர்ந்து நடப்போமாக.

அன்புடன்
***புலவர் அண்ணா***

# என்னுரை

என் இனிய உறவுகளே!

"எண்ணங்களின் வண்ணங்கள்" என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். பள்ளிப் பருவத்திலே நண்பர்களை மகிழ்விக்க உள்ளக்கிடக்கையில் முகிழ்த்த கவிவரிகள் இளமை தாண்டியும் இளமை உணர்வோடு இன்றும் சுனைபோல் எழுவதை எண்ணிப்பல தடவைகள் மகிழ்ந்திருக்கின்றேன். உண்மையிலே ஒவ்வொரு கவிதையும் முழுமையாக இயற்றி அவற்றை மீண்டும் படித்துப் பார்க்கும்பொழுது ஒரு குழந்தையைப் பிரசவித்த மகிழ்வும் ஆத்ம திருப்தியும் புத்தூக்கமும் ஏற்படுவதை என்னால் உணர முடிகிறது. மானிப்பாய் மொமோறியல் பாடசாலையில் பண்டிதர் கதிரவேலுப்பிள்ளை அவர்களிடம் முறையாகத் தமிழ் கற்றமை இன்றும் எனக்கு வழிகாட்டியாக உள்ளது.

ஆரம்ப காலத்தில் என் உள்ளத்தில் தமிழுணர்வை ஊட்டியவை சுதந்திரன் பத்திரிகையும், அதன் ஆசிரியரும் எனலாம். அடுத்து மீன்பாடும் தேனாட்டில் எனது பள்ளிப்பருவத்தைத் தொடர்ந்தபோது, உணர்ச்சிக் கவிஞர் காசி அண்ணனின் கவிவரிகள் என்னைத் தமிழின் வேட்கையை நுகர வைத்தது. நெஞ்சில் தமிழ் உணர்ச்சித்தீயைப் பற்றி எரியச்செய்தது.

மீன்பாடும் தேனாட்டில் க.பொ.த. சாதாரண தர, உயர்தரம் படிக்கும் வேளையில் பல கவியரங்குகளை மட்டுநகர் முத்தழகு, மற்றும் வி.த.குமாரசாமி ஆகியோருடன் நடாத்தினோம். பாடசாலைகளில் நடைபெறும் ஆசிரியர்களின் பிரியாவிடைகள், மற்றும் விழாக்களில் என் கவிதைகள் மாணவ உலகத்தை மிகவும் கவர்ந்ததுண்டு. விசேடமாக அனைத்திலங்கை சுற்றுலாச் சென்ற போது அதிபர் முதல் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்ட அச்சுற்றுலாவில் "காதல்" என்ற தலைப்பில் சுற்றுலாவில் கலந்த அனைவரையும் வைத்து நான் எழுதிய கவிதை பல பிரதிகள் கையெழுத்தாகவே மாணவிகளால் எழுதப்பட்டு அனைவரும் படித்தமை என் உள்ளத்தில இன்றும் பசுமையாக உள்ளது.

காலஞ்சென்ற எமது தந்தையார் திரு அ.வ. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஓர் மும்மொழிப் பண்டிதர். அவர் தனது முதுமாணிப் பட்டப்படிப்பை சிங்கள மொழியில் எழுதித்தேர்ச்சி பெற்றவர். மட்டக்களப்பு ஆசிரியர்

கலாசாலையில் விரிவுரையாளராகப்பணியாற்றிய காலத்திலும் தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதிபராகப் பணியாற்றிய காலத்திலும் பல கவிதைகளை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார். விசேடமாக சாரணீயத்தில் இலங்கைப் பதில் சாரண ஆணையாளராகவும், பதில் பாசறைப்பதி யாகவும் இருந்த காலத்தில் பல சாரணீயப் பாடல்களை மும்மொழிகளில் இயற்றிப்பாடி பாசறைகளை மகிழ்வித்திருக்கின்றார்.

என் தந்தையார் வீட்டில் எல்லோரும் உறங்கியபின் இரவு வேளைகளில் வெண்பாக்களை உரத்துக்கூறி எழுதுவார். சில வேளைகளில் முதல் இரண்டு வரிகள் எழுதி ஈற்றடி தடங்கும். சிலசமயங்களில் அவர் அருகே படுத்திருக்கும் எனக்கு ஈற்றடி உள்ளத்தில் வந்துவிடும். உடனே நான் எழும்பி எழுதி வைத்துவிட்டுப் படுத்து விடுவேன். காலையில் எழுந்ததும் பார்த்துவிட்டு என்னை மகிழ்வோடு உற்சாகப்படுத்துவார். இன்றும் அதை நினைக்கும் போது சிறு குழந்தைபோல் தந்தையின் ஆதரவுக்கரத்தை எண்ணிக் கண்கள் பனிக்கின்றன.

இலண்டனில் 1985ம் ஆண்டு மாணவனாக வந்தபோது லண்டன் கணக்கியல் கல்லூரியின் திராவிட மாணவர் கலாச்சாரக்கழகத்தில் வாணி விழா என்ற தலைப்பில் நான் தலைமை தாங்கி நடத்திய கவியரங்கம் லண்டனில் முதல் கவியரங்கமெனப் பலர் கூறினர். அதைத் தொடர்ந்து சண்றைஸ் றேடியோ, ஐ.பி.சி வானொலி, ரிஆர்ரி, ஸ்பெக்ரம் வானொலி மற்றும் தீபம் தொலைக்காட்டி போன்றவற்றில் பல தடவைகள் எனது கவிதைகள் அரங்கேறியுள்ளன. இவற்றுள் சன்றைஸ் டாக்டர் ஆர் நித்தியானந்தம் அவர்கள் பல தடவைகள் எனக்கு தன் வானொலியில் சந்தர்ப்பம் அளித்துஎன் கவிதைகள் வெளிக்கொணர்ந்துள்ளார். நடா மோகனும் பல தடவைகள் வாய்ப்பளித்துள்ளார். அதேபோல் ஐ.பி.சி வானொலியில் பிரசவ கள மூலமாகவும் தம்பி நாவரசன் என் கவிதைகள் வெளிக்கொணர்ந்திருக்கின்றார். இவர்களுக்கும் எனது நன்றிகள்.

இலண்டனிலும் அண்ணன் சிறீக்கந்தராசா, புலவர் அண்ணா, நாயன்மார்க்கட்டு சிவகுமார் அண்ணா ஆகியோருடன் சில, பல கவியரங்குகளை நடாத்தும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இதைப் பெரும்பேறாக எண்ணி மகிழ்கின்றேன். இக்கவியரங்குகள் புலம்பெயர்

மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது எனவாம்.
1985இல் வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம் நடாத்திய அலை ஓசை பத்திரிகையை சங்கத்தினர் என்னையும் தம்பி ஜெயகுமாரையும் நடாத்துமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்கள். வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்திற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். அச்சஞ்சிகை மூலம் பல கவிதைகள் நான் எழுதினேன். நான் எழுதும் கவிதைகளை, இன்னும் நன்றாக எழுது எழுது என்று அருகிருந்து ஊக்கப்படுத்திய தம்பி ஜெயக்குமாரையும் என்றென்றும் நன்றிப் பெருக்கோடு நினைவுபடுத்து கின்றேன்.

இம்மலருக்கு மிக ஆழமாக, என் உளத்தில் நின்று எழுதியது போல் என் மெல்லுணர்வுகளைக்கூட நன்கு புரிந்து கருத்துப் பொதிந்த அணிந்துரையை எழுதிய புலவர் அண்ணாவுக்கு என்றென்றும் எனது நன்றிகள். புலவர் அண்ணா என்மீது வைத்திருக்கும் பாசம் அவர் தம் அணிந்துரையில் அழகாக மிளிர்கிறது. அடுத்து இக்கவிதைத்தொகுப்பை ஆழமாக ஆய்ந்து எழுத்துப் பிழைகள் திருத்தி, கால நேரங்கருதி தவிர்ப்பன தவிர்க்க உதவிய அண்ணன் பற்றிமாகரனுக்கும் எனது நன்றிகள். மற்றும் வரிக்கு வரி எழுத்துப்பிழைகள் பார்த்து ஒழுங்கமைத்த திரு கருணானந்தராஜா அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

இன்றைய விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பிற்கும் திரு சிறீக்கந்தராசாவுக்கும், நூலை ஆய்ந்து சிறப்பிக்கும் திரு பற்றிமாகரன், திரு கருணானந்தராசா, தம்பி நாவரசன் ஆகியோருக்கும் எனது பணிவான நன்றிகள்.

சில இடங்களில் கால நேரங்கருதி ஓர் கவிதையின் சில வரிகள் மீண்டும் வேறு கவிதைகளில் புகுத்தியிருக்கின்றேன். நெற்றிக்கண் திறந்து என்னைச் சுட்டெரிக்காமல் குறை நீக்கி நிறை காணும் நல்லுள்ளம் கொள்வீரகளாக.

மீண்டும் அடுத்த மலரில் விரைவில் சந்திப்போம்.

அன்புடன்
பாலரவி

# பொருளடக்கம்


| இல. | பக்கம் |
|---|---|
| 00. அஞ்சலிகள் | 01 |
| 00. அணிந்துரை | 03 |
| 00. என்னுரை | 08 |
| 01. என் அப்பா | 13 |
| 02. தமிழின் இனிமை | 14 |
| 03. நல்லை நகர் தந்த நாவலர் | 15 |
| 04. தவக்கோலம் பூண்ட தமிழ்ப்பாலம் | 16 |
| 05. புலவர் நல்லதம்பி | 19 |
| 06. சிந்தை நிறைத்த தந்தை செல்வா | 21 |
| 07. தனிநாயக அடிகள் | 22 |
| 08. வித்துவான் வேலன் | 25 |
| 09. தொண்டர் தம் பெருமை - தங்கம்மா அப்பாக்குட்டி | 26 |
| 10. சங்கீத சாகரன் யேசுதாஸ் | 31 |
| 11. கவிஞர் வைரமுத்து மற்றும் கலைஞர் அர்ச்சனா விஜயம் | 32 |
| 12. மகாராணி மெச்சும் டயானாக்கண்ணு | 35 |
| 13. தூரத்துக்காற்றே | 37 |
| 14. தமிழ் எங்கே இனிக்கிறது | 38 |
| 15. வாணி விழா - சிறார்களுக்காக | 40 |
| 16. வாணி விழா - பள்ளி மாணவி படிக்கவோர் கவிதை | 43 |
| 17. என் இனிய யாழ்ப்பாணமே | 44 |
| 18. என் இனிய மீன்பாடும் தேனிலமே | 45 |
| 19. என் அன்புள்ள அம்மாவுக்கு ஒரு மடல்... | 46 |
| 20. சுனாமி | 49 |
| 21. மடமையை ஒழிப்போம் | 52 |
| 22. சுதந்திரத் தமிழீழத்தில் ஓர் சுற்றுலா | 53 |
| 23. அன்புள்ள காதலிக்கு | 59 |
| 24. கோட்டைக்குச் சென்றிட | 62 |
| 25. தமிழர் திருநாள் | 63 |

# பொருளடக்கம் - தொடர்ச்சி...


| இல. | பக்கம் |
|---|---|
| 26. தைப்பொங்கல் மடல் பள்ளிமாணவிக்கு | 69 |
| 27. தைமகளே வருக | 70 |
| 28. தைத்திங்கள் பிறக்கட்டும் | 71 |
| 29. தமிழும் சைவமும் | 72 |
| 30. சித்திரை பிறந்தாள் | 76 |
| 31. தமிழ் மொழி வளர | 77 |
| 32. தமிழ் கற்பிப்பீர் | 79 |
| 33. கல் நெஞ்சம் கரையட்டும் | 80 |
| 34. தீபாவளி | 82 |
| 35. தமிழ் அகதி | 86 |
| 36. தீபத்திருநாள் தீபாவளி | 87 |
| 37. மகளிர் அணி விழாவிற்கு - பள்ளிமாணவி படிக்க... | 88 |
| 38. கலைஞரே வாழி வாழி | 90 |
| 39. கலைஞரே முதல்வரே வாழி | 91 |
| 40. தமிழருவி சிவகுமாருக்கு ஓர் வாழ்த்து | 92 |
| 41. திருமதி சரஸ்வதி இராமநாதனுக்கு ஓர் வாழ்த்து | 94 |
| 42. திருமதி சாரதா நம்பிஆருரனுக்கு ஓர் வாழ்த்து | 96 |
| 43. ரி ஆர் ரி பிறந்தநாள் வாழ்த்து | 98 |
| 44. ஸ்பெட்ரம் வாழ்த்து | 100 |
| 45. மட்டக்களப்பபு BUDS அமைப்புக்கு வாழ்த்து | 101 |
| 46. சன்றைஸ் வானாலிக்கு வாழ்த்து | 102 |
| 47. வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்திற்கு வாழ்த்து | 103 |
| 48. மடமையை ஒழிப்போம் | 104 |

# என் அப்பா



நேர்மையால் நிறைந்த நெஞ்சம்
நினைப்பதை நடத்தும் ஆற்றல்
வாய்மைகொள் வீரம் கொண்டாய்
வணங்கிடா முடியைப்பெற்றாய்

சாரணீயத்தில் உந்தன்
சாதனை கொஞ்சம் அன்று
சிங்களம் மொழியில் உந்தன்
சிறப்பினைக் கண்டு கொண்டு

எங்கெலாம் அமைச்சர் பேச
உன்குரல் வழியே தந்தாய்
பங்கமில் உன் ஆற்றல் கண்டு
பெரிதுமே உயர்த்தி வைத்தார்

உயிர்களில் அன்பு கொண்டாய்
உதவிடும் உள்ளம் கொண்டாய்
பயிர்களில் கூட எந்தன்
பரிவொடு பாசம் தந்தாய்

மலையக மக்கள் கல்வி
சிறந்திட வேண்டுமென்று
கலையகம் தன்னை ஆக்கிக்
காவியமானாய் அங்கு

மும்மொழிப் புலமை பெற்று
மும்மொழிக்கவிகள் தந்து
மும்மொழி மூலம் உந்தன்
முயற்சியில் வெற்றி கண்டாய்

தந்தையாய் உந்தன் கடமை
தரணியில் எனக்குச் செய்தாய்
மைந்தன்நான் உந்தன் பெயரை
மகிமையாய்க் காத்து நிற்பேன்

# தமிழின் இனிமை

குண்டல கேசிமணி மேகலைசிலம்புஅதி
காரமும் கொண்ட தமிழே
எண்திசை புகழ்பரவி எங்கனும் நிறைந்திருந்து
எம்மவர் வளர்க்கும் தமிழே
மஞ்சத்தில் அமர்ந்த தமிழ் நெஞ்சினில் இனிக்கும் தமிழ்
தஞ்சையில் வணங்கும் தமிழே
தத்துவம் நிறைந்த தமிழ் மத்தளம் ஒலிக்கும் தமிழ்
வித்தைகள் புரிந்த தமிழே
சந்தனம் மணக்கும் தமிழ் குங்குமம் சிவக்கும் தமிழ்
சங்கரனார் சொன்ன தமிழே
வள்ளுவன் வளர்த்த தமிழ் வானவர் புகழ்ந்த தமிழ்
வல்லினம் மிகுந்த தமிழே
கங்கையில் தவழ்ந்த தமிழ் காவிரி நிறைந்த தமிழ்
சங்கையில் வளர்ந்த தமிழே
சங்கம் வளர்த்த தமிழ் மங்கலம் நிறைந்த தமிழ்
சிந்தனை பெருக்கும் தமிழே

ஏழ்கடல் வைப்பினும் நீள்மணம் வீசிடும்
ஆழ்கருத் தானதமிழே
புலிகயல் யாழொடு புவனம் போற்றிடும்
பொலிவுறு பைந்தமிழே
தென்னவன் பிரமராயன் மன்னவன் ராஜசோழன்
கண்மணி யானதமிழே
பொங்கிடும் ஈழவர்கள் நெஞ்சினில் தாங்கிநிற்கும்
பொய்கையாய்க் குளிர்ந்த தமிழே

## நல்லைநகர் தந்த நாவலர்

தமிழும் சைவமும் தரணியில் உயர்ந்திட
தன்னையே தந்து நின்றவர் நாவலர்
அமிழ்தாம் தமிழில் இலக்கண நூலை
எளிதாய்ப் புரியும் வடிவில் அமைத்தார்

சைவச் சிறார்கள் பள்ளியில் படித்திட
சைவவினாவிடை நூலையும் யாத்தார்
சைவம் தழைத்திடல் சிந்தையில் கொண்டு
சைவநூல்கள் பலபல யாத்தார்

தமிழகம் சென்று தமிழினை ஆய்ந்து
தமிழகம் வியக்க சொற்பொழிவாற்றினார்
தமிழகம் மகிழ்ந்து நாவலர் பட்டம்
தரணியில் பெருமையாய் தந்திடப் பெற்றார்

நெற்றியில் நீறு நிறையவே தாங்கிட
சீர்மிகு பைபிளைத் தமிழினில் தந்தார்
பற்றெலாம் தமிழும் சைவமும் என்றே
பாரினில் தன் கடன்பணி செய்தார்

அச்சியந்திர சாலையை அமைத்து
அரிய நூல்களை எங்களுக்களித்தார்
இச்சமுடன் நல் சொற்பொழிவாற்றி
எங்கள் அறியாமை அகன்றிட வைத்தார்.

ஒப்பிலா மனிதர் எம்மிடை வாழ்ந்த
உயர்வுநாம் கொண்டோம் வாழிய நாவலர்
எப்பொழுதும் அவர் எம்மிடை வாழ்வார்
எழுதிய நூல்கள் எம்மிடை வாழும்

# தவக்கோலம் பூண்ட தமிழ்ப்பாலம் சுவாமி விபுலானந்தர்

முத்தமிழ் முதல்வ சத்திய கணபதி நித்தியம் காப்பவனே
வித்தகர் விபுலர் விழாக்கவி தன்னை விளம்பிடும் வேளையில்
நித்தமும் எந்தன் நாவினிலேறி நடம்பல புரிந்திடவே
தத்துவமே எந்தாமணியே தொடர்ந்திடு நான் பாட

தாய்முலைப் பாலினைத் தந்திடும்வேளை தமிழினைத் தந்தவளே
ஆய்ந்துநல் வீரக் கதைகளையெல்லாம் அமுதுடன் கலந்தவளே
தேய்ந்திடும் தமிழர் தனியரசாளும் கனவினில் மிதப்பவளே
சாய்ந்து என் வணக்கம் செலுத்துவேன் நான் ஆசிகள் நல்கிடுவாய்

தவக்கோலம் பூண்ட தமிழ்ப்பாலம் பற்றி
கவிக்கோலம் ஒன்று கவினோடு ஆக்க
தலைப்பொன்று தந்த தகைமைசால் தலைவ

அன்புக் கவிகாள்
வித்தகர் விபுலரின் விழாவினில் கலந்திட
எத்தனை திசைகளில் இருந்தெலாம் வந்து
மெத்தெனக் கலந்த மேன்மைசால் பெரியோர்
அன்னையர் நங்கையர் அன்பர்கள் எல்லோர்
முன்னிலை எந்தன் முறைமிகு வணக்கம்

எத்தனை மாந்தர் இலங்கைத் தீவினில்
நித்தமும் பிறந்தனர் நிறையநாள் வாழ்ந்தனர்
பொத்தெனப் போயினர் புகழுடல் இன்றியே
அத்தனை மனிதரின் மத்தியில் இங்கோர்
சத்தியப் புதல்வன் சரித்திரம் படைத்தார்
எத்தனை துறையினில் எத்தனை வகையினில்
எத்தனை ஊரினில் வித்தகர் வாழக்கையில்
நித்தமும் பயனுற நிறையவே செய்தார்
முற்றிலும் உணர்ந்த மாமுனி படைத்து
மற்றவர் பயனுறை மிளிர்ந்தன எல்லாம்
சிற்றிடை நேரம் சொல்லிட முடியா

கற்றதில் ஓர்சில கவிதையின் சேர்த்தேன்
அங்கு-திருவிளக்கம் என்பவர் தூய நட்புக் கொண்டதால்
அருமையான பணிகளுக்கு அடிக்கல் அங்கு நாட்டினார்
திருவின் பிரிவு தாங்கொணாது துன்பக்கடலில் முழ்கினார்
அருமை நண்பர் பிரிவு அவரை ஆழ்துயரில் வீழ்த்துதே
பிரிவின் துயரை தாங்கொணாது துறவியாக மாறினார்
பிரபோதசை தன்யராகிப் பிரமச்சாரி யாகினார்.

இராமகிருஷ்ண விஜயம் என்ற திங்கள் இதம் தன்னிலும்
வேதாந்த கேசரி என்னும் மாத ஆங்கில இதழிலும்
ஆ-சிரியராகி எழுத்து வன்மை எங்கும் பரவச் செய்திட்டார்

சித்திரை மாதம் பௌர்ணமி நேரம் முற்றிலும் துறந்தவரை-சுவாமி
விபுலாநந்தர் என்றெரு துறவி வடிவில் கண்டனரே

தமிழர் வாழ்வில் தனியோரு பொக்கிசம் தரணியில் நிலைத்திடவே
அமிழ்தினும் இனிய யாழ்நூல் தந்து எம்மிடை உயர்ந்தாரே

நோயுடல் வருத்தப் பாரத மண்ணில் நிகழ்த்தினான் அரங்கேற்றம்
போயினன் புகழொடு பைந் தமிழ் நெஞ்சில் பிடித்தனன் ஓரிடமே

பிறமொழிக் கொப்பாய்ப் பைந்தமிழ் நெஞ்சில் புதுமைகள் கண்டவரே
திறமுடன் இசையை தரணியில் ஆராய்ந்து தனியிடம் தந்தவரே

இசையின் நரம்புகள் இசைத்திடும் ஒலியினில் இனிமைகள் கண்டவரே
இசையினில் பலவகை புதுமைகள் தந்து இதயம் நிறைந்தவரே

சென்னையில் அண்ணா மலையினில் இலங்கை பல்கலைக் கழகமதில்
அன்னவர் சேவையில் அவைகளுமுயர்ந்து அவனியில் செளித்தனவே

மதுரையின் சங்கமும் கரந்தையின் சங்கமும் அடிகளின் பணிகளினால்
திறமையும் பெருமையும் புகழதும் பெற்று பலவகை உயர்ந்தனவே

ஈழநாட்டின் இதயமாம் இலங்கும் மட்டு நகரிலே
வாழுகின்ற அறிஞர்கூடும் வனப்புமிக்க புகழ் நிலம்

காரைதீவு சாமித்தம்பி கண்ணம்மையின் மைந்தனாய்
பேருடன் உதித்த மயில்வாகனன் எம்மவன்

பன்னிரண்டு வயதிலே பராதம் திருக்குறள்
சொன்ன படி சொன்னதால் சொக்க வைத்தனன் ஊரையே

சின்ன அந்த வயதினில் செய்யுள்களை யாத்தவர்
என்னமாய் அணியினை யாப்பினைக் கோத்தவர்

கல்முனை மிசனிலும் மட்டு ஆச் மைக்கலில்
கல்வியை கருத்துடன் கற்றதனால் உயர்ந்தவன்

வடமொழி இலக்கணம் ஆங்கிலம் இலக்கியம்
திடமொடு கற்றதால் திறமைபல பெற்றவன்

விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்ற முதல்வனே
மதுரையில் பண்டிதர் பட்டமும் கொண்டவனே

இராமகிருஸ்ண சுவாமியாம் சர்வானந்தர் இலங்கையில்
பாதம் வைத்த போதிலே பத்தி கொண்ட வாகனன்

தேச சேவை செய்வதில் தன்னை அர்பணித்தனன்
வேசமற்ற தொண்டினை வேதமாகச் செய்பவன்

ஈழ நாட்டின் திலகமாய் இலங்குகின்ற யாழ் நகர்
மேவுமானிப் பாயினில் மிளிரும் இந்துப் பள்ளியில்

தலைமைபெற்றுக் தலையகம் தலைநிமிரச் செய்ததால்
தமிழர் நெஞ்சை வடகிழக்கில் திருடிக் கொண்ட தூயவன்.

# புலவர் நல்லதம்பி

நாமமதற்கேற்ற நல்லகுணங்கொண்ட எங்கள்
முதுதமிழ்ப் புலவரென்று தமிழுலகம் அழைத்துநிற்கும்

காலத்தின் ஓட்டத்தில் கலங்காது ஒளி வீசி
ஞாலத்தில் நீடுபுகழ் பரப்புகின்ற பாவலராம்

நல்லதம்பிப் புலவரென்ற நாமமதைக் கொண்டறிவீர்
தொல்லுலகில் வாழ்க்கையிலே தீரமுடன் ஆற்றிட்ட

நல்லபல சேவைகளை நன்றியுடன் நினைக்கின்றோம்.
வல்ல முதுதமிழ்ப்புலவர் நாமமென்றும் வாழியவே

காலத்தால் அழியாத காவியங்கள் படைத்தின்று
ஞாலத்தில் புகழோச்சும் நாயகனை நினைக்கின்றோம்

அன்னாரின் மறைவு கண்டு ஐபத்து ஆண்டாச்சு
இன்னமும்எம் உள்ளமதில் உம்கவிகள் நிலைத்திடுதே

பிள்ளைத் தமிழ் கொண்டு பெருங்கவிகள் வடித்திட்ட
நல்லதம்பிப் புலவர்புகழ் பாடிநின்றேன் கேட்பீரோ

பாலர்களின் நலனுக்காய்ப் பாட்டுக்கள் பலவியற்றி
காலமெல்லாம் தமிழோடு அவர்வாழ வழிசெய்தீர்

சமுதாய உணர்வு சலிக்காத மொழிப்பற்று
மனிதாபி மானம் மகத்தான பண்பு

ஆழ்ந்ததமிழ் மோகம் அழியாத நேர்மை
இனமான உணர்வு சத்தியத்தின் தரிசனம்

உயிர்வதையைத் தடுப்பதிலே உயர்ந்தபல நோக்கம்
உயர்வான ஜீவ காருண்ய மனப்பாங்கு

மும்மொழியைப் பல்மதத்தைப் பரிந்து கொண்ட பாங்கு
தன்மொழியில் தன்மதத்தில் தீர்க்கமான பற்று

பிறர்மதத்தை வெறுக்காத பரந்தநல்ல உள்ளம்
அறமோச்சம் கருத்துக்கள் அணிகலனாய்க் கொண்டார்

கொழும்பினிலே ஆசானாய்க் கற்பித்த வேளை
மழுங்காத ஆங்கிலத்தில் மிளிர்ந்திட்ட பாங்கு

சிறாருக்காய்ச் சிந்தை கொண்டு சிறப்பித்த நூல்கள்
பிறர்வியக்க வானொலியில் விரிவுரைகள் தந்தார்

இலக்கணத்தில் இலக்கியத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி - இவர்
புலமைதனை வியந்து தமிழகத்தில் புகழ்ச்சி

முதுதமிழ்ப் புலவரென்ற தமிழகத்தின் விருது
இதுவொன்றே அவராற்றல் இயம்புகின்ற புலமை

இவர்
பாவன்மை நாவன்மை பெற்றுமனம் கொண்டு
வடக்கினிலும் கொழும்பினிலும் பாராட்டுக் கூட்டம்

நல்லதமிழ்ப் புலவரவர் நானிலமும் போற்ற
பல்கலைக் கழகமதில் விரிவுரைகள் தந்தார்

மணித்தமிழ் நாடும் மரதன் ஓட்டமும்
என்ற நூல்யாத்து பொன்னாடை கொண்டார்

செந்தமிழில் சைவமதில் பிரசங்கம் செய்து
எந்தமிழர் உளங்களிலே என்றும் நிறைந்திட்டார்

நூல்கள்பல யாத்தார் நாடகங்கள் நடித்தார்
காலமெல்லாம் பயனளிக்கும் கருத்தக்கள் தந்தார்

அன்னாரின் புகழ்பாட அரைமணியோ சிறிது
அடியேனின் கருத்துக்கள் அவற்றினிலே தந்தேன்

காலமெல்லாம் நிலைத்துநிற்க அவரளித்த சொத்து - அவர்
மைந்தன் சிவநாதனிங்கு தொடர்ந்திடுவார் சேவை

# சிந்தையை நிறைத்த தந்தை செல்வா

தந்தை என்ற விந்தை மனிதரை
சிந்தை இருத்தி என் கவி தொடர்வேன்

நலிந்த தோற்றம் நலியாத உள்ளம்
கனிந்த பார்வை காருண்ய உள்ளம்

ஈழத் தமிழரின் இதயக் கமலம்
ஈழத்துக் காந்தி அகிம்சையின் வடிவம்

நொந்த தமிழரின்  நலன்களைப் பேண
சொந்த வாழ்க்கையை ஈந்து தந்தனன்

சேர்ந்து வாழும் சுருதி பிழைத்ததால்
தேர்ந்து எடுத்தனன் ஈழக் கொள்கையை

கொண்ட கொள்கையைக் கெட்டியாய்ப்பிடித்து
நின்றனன் தன்னுயிர் நீத்திடும் வரைதனில்

தந்தைநீ தொடக்கிய தூயவழிதனை
உந்தன் கட்சியே உதறி எறிந்தது

ஆண்டவா ஈழத் தமிழரை நீதான்
அணைத்திடு என்றுநீ  அணையுமுன் அரற்றினாய்

நொந்த உந்தன் நலியாக் கொள்கையைச்
சிந்தையில் கொண்டனர் தம்பியும் தோழரும்

தமிழரசு என்றஉன் தாரக மந்திரம்
அமிழ்தென எங்கள் நெஞ்சினில் உறைந்ததே

தந்தையே உந்தன் நாமம் நினைந்து
தாயக ஈழப் போரினைத் தொடர்வோம்

வாழிய உன்புகழ் வாழிய உன் பெயர்
வாழிய ஈழம் வாழிய வாழிய

அமிழ்தான தமிழ்வாழ அகிலமெங்கும் தூதுசென்ற
தனிநாயக அடிபற்றி தொடர்ந்திடுவேன் என்கவியே

தமிழ் உணர்ந்த தனிநாயகம்
தலைப்பொன்றில் கவியிசைக்க
அழைத்த அமைப்பாளருக்கு
முதல் நன்றி நான் சொல்வேன்

தனிநாயக அடிகள் தமிழுக்கு செய்தபணி
தனியாக நான் சொல்லி மாறாது இன்று
எனினும் என்அறிவில் எட்டிய சிலவற்றை
இனியுங்கள் முன்னே எடுத்தியம்ப முன்வந்தேன்

தமிழ் வாழ தமிழ் இனம் வாழ
தரணி எங்கும் தமிழ்த்தூது சென்ற
தனிநாயகம் பற்றி தொடர்ந்திடும் வேளையிது

நெடுந்தீவில் பிறந்த மகன் நேர்வழியில் சென்ற மகன்
சேவியர் என்னும் நாமமதை
சிறுவயதில் கொண்ட மகன்
றோமையிலே கல்விகற்ற வேலையில் தமிழுணர்ந்து
தானும் தனைத் தமிழப்படுத்த
தனிநாயக முதலியென்று
நாமமதைக் கொண்டமகன் - தன்
பிஞ்சு வயதினிலே பாலப்பருவமதில்
அன்னையினை இழந்து நின்றார்
பாலன் இயேசுபால்
பாசம் மிகக் கொண்டார்
ஊர்காவற்றுறைதனுக்கு உயரிய நல் பெயர் தந்த
அந்தோனியார் பள்ளியிலே இளமைக் கல்விகற்று
இளமையிலே கவிபாடி
இன்கவி பல தந்தார்
பிரகாசிக்கும் சிறு ஒளியை
பொழிந்து கவியாக்கி நின்றார்
ஆங்கிலத்தில் புலமை பெற்று

அதிலும் பல பதக்கம் பெற்றார்
வாலிபத்தின் உயிர்ப்பு என்ற
டொல்ஸ்டோயின் நூலொன்று
வாலிபத்தின் சிந்தனையை
யேசுவழி தூண்டியது
குருத்துவத்தின் ஈர்ப்பினிலே
மானிடத்தை தத்துவத்தை
விருப்போடு கற்று நின்றார்
தமிழகத்தில் திருவனந்தபுரத்தில்
குருத்துவத்தைத் தொடர்ந்து நின்றார்
கிறித்துவத்தில் தான் கொண்ட
குறைவற்ற தாகமதால்
கடல் கடந்து றோம் சென்று
இறையியலைக் கற்றுணர்ந்தார்
தமிழ்ப்பணிக்கு வித்திட்டார்
தனிநாயகம் அடிகளவர்.

அன்னாரின் உதடுகளில் அசைந்துவரும் சொற்றொடர்கள்
எல்லோரின் ஊர்களிலும் என்றென்றும் நிலைத்திருக்கும்
றோமைநகர் தானறிய வீரமாமுனிவர் கழகமென
ஆன்றோருடன் சேர்ந்து அமைத்தங்கு புகழ்பெற்றார்
வத்திக்கான் வானொலியில் நித்தமும் தமிழ்முழுங்கி
தித்திக்கத் தமிழமுது தந்திருந்த தூயவரம்
றோமைநகர் சூழலிலே நாயகத்தார் தமிழுணர்ந்தார்
முப்பத்தி எட்டில் முழுத்துறவி ஆகிநின்றார்
ஆங்கிலமும் இலத்தினொடு கிரேக்கம் எபிரேயமும்
பாங்குடனே பல மொழியில் புலமைபெற்று பெரிதுயர்ந்தார்
குருசாமி ஐயாவை குருவாக்கி இலக்கணத்தை
நெறியோடு கற்று தமிழறிவை மிகக் கொண்டார்
அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கற்கையிலே
பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்ற தலைப்பினிலே
ஆய்வுசெய்து அங்குமிவர் எம்.ஏ பட்டம் பெற்றார்
ஈழநாட்டு இளைஞருக்கான இனியமன்றம் தானமைத்தார்
நாற்பத்தி எட்டினில் நானிலமே புகழுகின்ற
தமிழ் இலக்கிய கழகமதை நிறுவிநின்றார்
ஆங்கில முத்திங்கள் ஆய்வேடாம் என்றவொரு

தமிழ்க் கலாச்சாரமென்ற சஞ்சிகையைப் பிரசுரித்தார்
தமிலோடு கிறிஸ்தவமும் தகுசைவமும் தான்கற்று

தமிழ்வாழத் தனையீந்தார் தனிநாயக அடிகளன்றோ
அன்னியரை எம்மொழியில் ஈர்க்கின்ற பாங்கினிலே

ஆய்வுகளை அற்புதமாய் அளித்தவர் அடிகளன்றோ
ஓங்கிய நல்லாற்றலுடன் உரைத்திட்ட உரைகளெல்லாம்
தூங்கிய எம்மவரின் உள்ளத்தை எழுப்பியதே

நானிலமே வியக்கின்ற நல்வதொரு மாநாட்டை
யாழ்மண்ணின் புகழ்ச்சிக்கு யாத்தவர் எம்நாயகமே

ஆள்வோரின் அடக்குமுறை அளவிறந்து போகையிலே
ஆழ்மனத்தில் வலிகொண்டு ஆண்டவனை நொந்து நின்றார்

தான் வாழுங் காலத்தில் தமிழ்வாழத் தனைத்தந்த
வான் போற்றும் தனிநாயக ஐயனைநாம் நினைந்திடுவோம்.

## வித்துவான் க.ந.வேலன் அவர்களின் பவழ விழாவின்போது வாசித்தளித்த வாழ்த்துப்பா

தமிழ்க்கடவுள் நாமமதைத் தன்னகத்தை தாங்கி
அமிழ்தான தமிழ்வாழ அருந்தொண்டாற்றி
ஓங்கி நெடிதுயர்ந்து ஒளிவீசும் தமிழ்ச்சுடராய்
பாங்குடனே வீற்றிருக்கும் பைந்தமிழின் காவலனே!
இலக்கியத்தின் ஆழமதை இனிப்புமிகு தமிழ்வளத்தால்
துலக்கிநிற்கும் தூயவனே தன்மானத் தமிழ்மகனே!
முத்தமிழின் முச்சுவையை மேடைகளில் சுவை ததும்பத்
தத்துவமாய்த் தருபவனே தமிழ்த்தாயின் திருமகனே
வித்துவத் தமிழ் மொழியால் விளக்கங்கள் பலதந்த
வித்துவான் வேலன் ஐயா நீவீர் வாழ்வாங்கு வாழ்ந்திடவே
பவழவிழா மேடைதன்னில் பணிவோடு உமைவாழ்த்த
அமிழ்தான தமிழ்மொழியில் எழுத்துகளைத் தேடுகின்றேன்
வெய்யோனை வாழ்த்த விளக்கொலிபோல் விழைந்தாலும்
பையவே பிழைபொறுத்து பெருமனதாய்க் கவிகேட்பீர்
வோல்தம் பொறஸ்டிலொரு வனப்பான தமிழ்ப்பள்ளியில்
கல்வி கலாச்சாரமதைக் கற்கின்ற தமிழ்ச்சிறார்களுக்கு
ஆழத்தமிழ்க்கிணற்றில் அள்ளிச்சிறு உவமைகளை
நீளத்தந்த பெருந்தகையே நன்றியாய் நினைவுகொள்வோம்
ஆத்மீகத் துறைதனிலே அளப்பரிய கரிசனத்தால்
ஆத்மார்த்த உணர்வுகளை உந்தனிடம் நாமறிந்தோம்
மரபுநெறி தவறாத மானிடத்தின் முழு வடிவை
நிரவிநிற்கும் நெடுமகனே நினை வாழ்த்தி நிற்கின்றோம்
ஈழத்தில் வாழுகின்ற எந்தமிழர் விடுதலைக்காய்
நீளக்குரல் கொடுக்கும் நாயகனே நீவாழ்க! நீவீர்
பல்லாண் பல்லாண்டு பைந்தமிழைப் பரப்பிடவே
எல்லாம் வல்ல ஈசனைநாம் இறைஞ்சுகின்றோம்.

08.11.1998

# தொண்டர் தம் பெருமை
## சிவதமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

கார்கொண்ட மேகம்போல் கருத்தெல்லாம் நிறைந்திருந்து
சீர்கொண்ட நிலைமைதனைத் தாங்கிநிற்கும் தலைவா
நேர்கொண்ட என்கவிக்கு நெஞ்சில் உரம் ஏற்றிடட்டும்
அறிவுசால் அவையோர்க்கும் அன்னையர்க்கும்
என்னோடு கவியிசைக்க இங்கே வருகை தந்த
பொன்னேடு பொறித்த கவிஞர்காள்-உங்கள்
எல்லோர்க்கும் என் வணக்கம் ஏற்றிடுவீர் நான்பாட
எல்லாமே ஈந்தளிக்கும் அம்மனவள் தாள் பணிந்து
என் கவியை இவ்வரங்கில் நான் வைப்பேன் பணிவோடு
தொண்டர்தம் பெருமையென்று தலைப்பினில் நின்று
சிவதமிழ்ச்செவ்வி என்றும் துர்க்கா துரந்தரி என்றும்
பல்பெயர் தாங்கி நிற்கும் -துர்கை
பக்தகை-பாடகியை-வித்தகையை கலாநிதியை
தங்கம்மா அம்மையை பலமைல்தாண்டி நின்று
பாடலால் வாழ்த்த வந்தேன்

அம்மையே இன்றும் என்றும் அம்மனின் அருளும் பெற்று
அரும்பணி யாற்றி நிற்க உண்மையாய் வாழ்த்துகின்றேன்
உளத்தினில் ஏற்றிடுவீர் தானே
பைந்தமிழ்ச் செல்விக்கோர் பவளவிழா
தீந்தமிழ்ச் செல்விக்கோர் பவள விழா
சிவதமிழ்ச் செல்விக்கோர் பவள விழா
அம்மையவள் துரந்தரிக்கோர் பவளவிழா
தெல்லிநகர் சேவைபெற்ற தாயவளுக்குப் பவளவிழா
அலைஓசை என்றொரு சஞ்சிகையை
அணிந்துவந்த காலமதில் நானுமோர்நாள்
அம்மையை நான் பேட்டி கண்டேன் -அப்போதுதான்
அருள்பொழியும் வதனமதைக் கண்டுநின்றேன்
கூறுகின்ற தமிழ்மொழியில் தென்றல் கண்டேன்
கொள்கைதனை விளங்குகையில் கனவு கண்டேன்
பேசுகின்ற பேச்சினிலே பெண்மை கண்டேன்

பெருந்தன்மை உருவாக அவரைக் கண்டேன்
பேருவகை கோண்டேன் அவர் பேட்டி கண்டு.
பல்லாயிரம் மைல்தொலைநின்று பணிகள் ஆற்றும்
நல்லவோர் இதயத்தை வாழ்த்த வந்தேன்

சொல்லாயிரம் கோடிப்பாக்கள் செய்தேன்
சொல்வதற்கோர் நேரமே கொஞ்சம் தானே

தெல்லியூர் நகர்தனுக்குப் பெருமை சேர்த்த
நல்லுள்ளம் தன்னை நான் வாழ்த்துதற்கு

துர்க்கையம்மன் கோயிலுக்கு பெருமை தன்னை
தங்கம்மா அம்மையவள் தேடித்தந்தாள்
வாரமோர் செவ்வாயில் வணங்கி நின்றே
தேர்ந்திடுவீர் நல்லதோர் மாங்கல்யத்தை

ஆர்வமுடன் அணங்குகளை அழைத்துவந்து
அம்மனருள் காட்டி நின்ற தாயே வாழி

நோயுற்று எம்மவர்கள் நலியும் வேளை
நல்லதுணை துர்க்கையென நவின்று நின்றாய்

கோயிலுள்ள தெய்வத்தையும் உனையும் சேர்த்து
கும்பிடாத கரங்களில்லை இதுவே உண்மை

வாழ்விழந்த எம்மவரின் வாழ்வில் இன்பம்
மீளளிக்க நீபட்ட தியாகம் சொல்வேன்

செல்லுமிடம் எங்கும் தமிழ் சைவந்தன்னை
இல்லையென்னாது என்றும் அளித்து நின்றாய்

வாழ்விழந்த பாலருக்கு வாழ்வு தேடி
வாழுமிடம் தானமைத்து வலிமை தந்தாய்

போக்கற்ற பாவியரின் புழுக்கம் போக்கி
புகலிடங்கள் பல தந்து பெருமை தந்தாய்

பண்ணோடு நீபாடும் பாடல் கேட்டு
கண்ணாலே நீர்வழியக் கசிந்துருகும்

பக்தர்களை துர்க்கையவள் முன்னே கண்மேல்
அற்புதமாய் கீதங்கள் இசைத்து நின்றாய்

பைந்தமிழில்இந்து மதம் கலந்து நின்று
செந்தமிழில் சிவநெறியைச் சொல்லி நின்று

எந்தமிழர் உளங்களிலே இந்துமத
விந்தைகளை வியப்போடு விளக்கி நின்றாய்

தீயவர்கள் ஆலயத்துள் நுழையும் வேளை
தூயவளே உனக்குள்ள சக்தி தன்னால்

தீயவரும் தூயவராய் மாறச் செய்து -அவர்
ஆலயமே கதியென்று ஆக்கி வைத்தாய்

ஈழமதில் பெண்ணினத்தின் உயர்வு நோக்கி
ஆழமுறு அரும்பணிகள் ஆற்றி நின்றாய்

தேர்வடத்தைப் பெண்ணினத்தை இழுக்க வைத்த
பேர் கொண்ட புகழினையும் பெற்று நின்றாய்

இந்துமதம் எடுத்தியம்பும் ஆற்றல் கண்டு
செந்தழிழில் சொல்லாற்றும் விந்தை கண்டு
சிவதமிழ்ச் செல்வி என்று பட்டம் தந்தார்.

தெல்லிநகர் இந்துமதம் கொழித்து நிற்க
நல்லவொரு நாயகியாய் நின்று செய்தாய்

நீ செய்த சேவைகளால் மகிழ்ச்சி கொண்டு
டாக்டர் எனப் பட்டமதைத் தந்து நின்றார்

வயோதியத்தின்   வேதனையால் முனகிநிற்கும்
வயோதிபர்கள் வாழ்க்கையிலும் வளங்கள் சேர்த்தாய்

அம்மனருள் தேடிநிற்கும் ஆடவருக்கும் -அவள்
இன்னருளை அடைவதற்கு வழிகள்  சொன்னாய்
மக்களது சேவையிலே மகேசன் தன்னை
முழுமையுடன் நீ கண்டு இன்பமுற்றாய்

அரை நூற்றாண்டு உந்தன் அரிய சேவை
நிறைவோடு எம்மக்கள் பெறவே நின்றாய்

அம்மையே உந்தனரும் ஆற்றல் கண்டு -இந்த
அம்மன் ஆலயத்தினரும் உவகையுற்றனர்

நாட்காட்டும் கலண்டரில் உனை நாளும் பார்க்க
நனிபொறித்தார் உன்னுருவம் நாளும் வாழி

ஆலயத்தில் மண்டபத்தில் அருளாய் வீசும்
அம்மையே உன்படத்தை பொறித்து நின்றார்

உன்னுருவம் கடல்கடந்தும் ஒளிரும் போது
உன்புகழை அறியாதார் உலகில் உண்டோ

மாங்கல்யம் இழந்திட மங்கையர்க்கு
மதிப்பான மறு வாழ்வு அமைத்துத்தந்தாய்

பக்தர் நிரம்பி வழிகின்ற பேருந்துகள் - ஒவ்வோர்
செவ்வாயும் வீதியிலே   செல்ல வைத்தாய்

அறச்சாலை மடங்களொடு சத்திரங்கள்
அணிஅணியாய் அமைத்து மகிழ்வு கொண்டார்

மாதர்களை ஒன்றிணைத்து இயங்க வைத்தாய்
ஏதிலிகள் நீயணைத்து அவர்வாழ்வு சிறப்பித்தாய்

தாயற்ற குழந்தைகட்குத் தாயுமானாய்
ஏழைகளின் சிரிப்பினிலே இறையைக் கண்டாய்

கல்விக்காய் ஏங்கி நிற்கும் குழந்தை கட்கு
நற்கல்வி புகட்டுதற்கு வழிகள் தந்தாய்

தேவையென நீகருதிச் செய்யும் சேவை
தியாகத்தின் பக்கங்கள் என்று சொல்வேன்

தாய் நாட்டின் விடுதலைக்காய் தம்மை ஈந்தோர்
சேய்களையும் சிறகிற்குள் காத்து நின்றார்

இந்துமதம் நலிகின்ற வேளையெல்லாம்
தங்குதடை இல்லாமல் தமிழ் வளர்த்தாய்

எங்கள் மதம் உயர்வு பெற உனையே தந்தாய்
மங்காத புகழோடு வாழி அம்மா

சிறியோனின் கவிகேட்ட உங்களுக்கு
சிரந்தாழ்த்தி வணக்கங்கள் தந்து நின்றேன்

அரங்கமைத்து அவர் புகழை பாட வைத்த
சிலயோகம் அறங்காக்கும் தலைவருக்கும்

சைவம் வளர் முன்னேற்ற கழகத்திற்கும்
வாழ்த்துக்கள் பலகோடி தந்து நின்றேன்.

வாழிய நீர் வளம் பெற்று வாழிவீராக

## சங்கீத சாகரன் யேசுதாஸ் அவர்களுக்கு
## சிதாமா கலைக்குழுவின் வாழ்த்துரை

வெய்யோன் குடைசாய்ந்து வேகுவெயில் தான்தணிந்து
மெய்யான தென்றல் மெல்லெனவே மேனி தொடும்

பொன்மாலைப் பொழுதினிலே பார்குளிரும் வேளையிலே
இன்னிசையோன் ஏழிசையின் ஆழ்கடலில் தான்குளித்தோன்

கானமழை பொழியக் கார்கொண்ட மேகம்போல்
மோனவிழி கொண்டு மிளிர்ந்திருக்கும் இசைப்புயலே

கலைவாணி அருள்பெற்ற கானக் குயிலோனே
நிலையான இசைவாழ நீள்தூணாய் நிற்போனே

கேரளத்தாய் ஈன்றுதந்த கவிமைந்தா கலையரசே
பாரதத்தாய் விருதுபெற்ற பத்மசிறீ பாவலனே

இறைமைந்தன் நாமத்தை ஏற்றெடுத்த பாவேந்தே
குறைவில்லாக் கவிபாடும் குறுந்தாடிக் கலைவடிவே

சங்கீத சாகரனே சலிக்காத கலையுளமே
மங்காத புகழுருவே மாண்புடை யேசுதாஸே

சீமைதனின் வடபுலத்தே சுற்றிவாழ் ரசிகர்களாம்
சிதாமாவின் கலைக்குழுவோர் சிரத்தையுடன் வாழ்த்துகின்றோம்

வாழிய நீ பல்லாண்டு! வளர்க உன் கலைத்திறமை!
பாடிடுக பாரெல்லாம் படைத்திடுக சரித்திரத்தை

4. ஆவணி 96
ஸ்கந்தோப் இங்கிலாந்து

கவிஞர் வைரமுத்து மற்றும் கலைஞர் அர்ச்சனா ஆகியோர்
இலண்டனுக்கு வருகை தந்தபோது வாழ்த்திய வாழ்த்துப்பா

சத்தாம் இன்பத் தமிழாலே சொட்டாய் அமுதக் கவிதந்து
நித்தம் எங்கள் நெஞ்சத்தில் நீடு வாழும் கவி மழையே
முத்தே வயிர ஒளியே உன் வரவு கண்டு மகிழ்கின்றோம்

ஆடல் அணங்கே அபிநயமே திரை அரங்கில் எம்மை ஆள்பவளே
போடும் வேடம் தனில் ஒன்றி புதுமை செய்யும் பெருங்கலைஞ
அழகு மயிலே அர்ச்சனையே அன்பாய் வரவை நல்கிடுவேன்

ஒப்பனைக் கலையில் உயிர்வைத்து சொர்ப்பனத்தையே நிஜமாக்கும்
ஒப்பனைக் கலைஞ எழுத்தாள மோகன நீயும் வாழியவே

சொல்லில் வடிக்க ஒண்ணாத சுகந்தமான ஓர் நிறைவு
மெல்ல நெஞ்சை நிறைப்பதனை மெதுவாய் உணர முடிகிறது

அன்புக் கலைஞ உம் வரவு என்றும் எங்கள் நெஞ்சத்தில்
இன்பத் தேனாய் ஊறிவிடும் இதிலோர் ஐயம் எமக்கில்லை

அண்ணா!
ஆழக் கருத்தை அருந்தமிழில் நீளப்புதைத்து மெருகூட்டி
ஆளும் உந்தன் எதுகையினால் அசரவைக்கும் மோனையினால்

ராகம் தந்து சுகம் தந்து ரசனை கொண்டு சுவை மீட்க
நாளும் பொழுதும் நெஞ்சினிலே நன்றாய்த் தேனை வார்த்திடுவாய்

பாமர மக்கள் உள்ளமதில் படிகம் போன்ற பழங்கொள்கை
வேரறுக்க உளங்கொண்டு விதம் விதமாகக் கவிதந்து

பாடல்களினால் பலர் நெஞ்சில் புதுமைக் கவிஞன் எனப்போற்ற
நீடுவாழும் கவியரசே நிந்தன் பணிதான் தொடரட்டும்

ஒற்றுமை மிகுந்த எங்களிடை
வேற்றுமை எவையெனப் பார்ப்போமா?

மொழியால் பேச்சால் சமயத்தால்
கலையால் கவியால் காவியத்தால்
முழுதாய் நிலையாய் ஒற்றுமைகள்
முடிவாய் இருந்தும் நிலையென்ன?

முப்பது மைல்தான் எம்மவரை
முழுதாய்ப் பிரித்து இருந்தாலும்

எத்தனை பெரிய வேற்றுமைகள்
எமக்குள் உண்டு அறிவீரோ

புறநானூற்றைக் கதைக்கின்றீர் - புதிய
புறநானூற்றை எழுதுகின்றோம்

பாரதி கண்ட புதுமைப்பெண் - அங்கு
பாடலுடனே நின்றிட்டாள்

முறத்தை எடுத்துப் புலியடித்த
முன்னோர் கதையில் மூழ்கிட்டீர்

அச்சம் மடம் நாணத்தை
அரிவையர் காத்தல் கடனென்று

துச்சமாக்கிப் பெண்களினை
அறையில் அடைத்தே காத்திட்டீர்

சேயின் கற்பைத் தாய்முன்னே
சிங்களத்தான் குதறுகையில்

மானம் முன்னே அச்சம் மடம்
மரபாய்க் காத்தல் முறையாமோ

சேலைக்குள்ளே வாழ்ந்த இனம்
சீறியெழுந்தது தமிழ்காக்க

ஈழப்போரில் இவர் பங்கு
எல்லாப் பக்கமும் நிறைந்திருக்கும்

இன்பத் தமிழால் ஒன்றாகி
என்றும் உறவை நேசிக்கும்
ஈழத்தமிழர் குரலாலே
ஒன்றே ஒன்றை வேண்டுகின்றேன்.

ஊறும் அமுதச் சுரபியைப்போல்
ஊற்றும் உங்கள் கவித்துளிகள்

போரில் துவளும் எம்மவர்க்காய்
பொழிந்திடட்டும் மழையாக

பெருகும் கவிதை அமுதத்தை
பருகும் பாரதத் தமிழரெல்லாம்

உருகும் ஈழத் தமிழருக்கு
உதவிக்கரங்கள் நீட்டிடட்டும்

# மகாராணி மெச்சிய மாட்டுப்பொண்ணு

## டயானா

நானோர் தமிழன் - ஆனால்
உந்தன் மரணத்தை எண்ணுகையில்
எந்தன் நெஞ்சம் கனக்கின்றது
உள்ளம் அழுகின்றது
உறவொன்றை இழந்த வேதனை உள்ளத்தில்
ஓ டயானா உனக்காக உந்தன் ஆத்ம சாந்திக்காய்
ஈழவன் நான் உள்ளத்தில் இருநிமிடம்
உண்மையாய் அஞ்சலித்தேன்

கனமாய் இறங்கி காலைப் பிணைக்கிறது
மானிடத்தை வென்ற மாண்புமிகு இளவரசி

வெள்ளை மாளிகை முதற்கொண்டு
வீதியில் போவோர் வருவோரும்
உள்ளம் கனக்க உலவுவதை
உந்தன் பிரிவில் நான் பார்த்தேன்
அழகின் மகுடமே, நாகரிகத்தின் உச்சமே
உடையலங்காரத்தின் உவமையே
எளிமையில் உருவமே
நடையின் நாயகியே
பேச்சின் புதுவடியே
காருண்யத்தின் மறுவடியே
தொழுநோய் கொண்டோரைத்
தொட்டுநீ அரவணைத்த
தாய்மை கண்டு
எம் தமிழ்ப்பண்பு வெட்கியது.
உன் மீது மொய்த்த. கமராக்கள்
- உலகின்
எவர்மீதும் நானறிய மொய்த்ததில்லை

பிரித்தானியாவுக்கு ஓர் மகாராணி - ஆனால்
நீயோ உலகின் தனி ராணி

உன் சிகையலங்காரம் கண்டு - தம்
சிகையை இழந்த மாதர் தான் எத்தனை

உன் நடைபோட முயன்று - தம்
நடை இழந்த மாதர்தான் எத்தனை

உன் உடையலங்காரம் உலகில்
எல்லோர் கண்களுக்கும் ஓர் தனியலங்காரம்

காந்தத்தை மிஞ்சிய கருணைக் கண்கள் - அதைப்
பார்த்தவர் வாழ்வினில் பித்தர்களே

உலகின் அமைதிக்காய் மிதிவெடியின் அழிவிற்காய்
சிறுவர்கள் நலனுக்காய் முதியோர்கள் வாழ்வுக்காய்

உன்னைத் துறந்து உலகுக்கு உழைத்தாய்
வானத்து வெண்புறாவாய் வலம் வந்தாய் உலகெங்கும்

அமைதிக்காய் அருப்பணிகள் அடுத்தடுத்து நீ செய்தாய்
அன்னை திரேசாவின் அரவணைப்பில் நீநின்றாய்

உலகத்து உதடுகளில் உச்சரித்த ஓர்நாமம்
உயிரற்ற உடலாக உறங்கிக் கிடக்கின்றது

முப்பத்தாறு வயதில் மரணத்தை முத்தமிட்டாய்
மகாராணி மருமகளாம் இந்த டயானாக் கண்ணு

பெண்ணே உனைப்பற்றிப் பேசாத வாய்களில்லை
என்னே உன் ஆளுமை உலகெல்லாம் சோர்ந்திடுதே

# தூரத்துக் காற்றே

ஆரத் தழுவி அடிமனதைத் தொடுகின்ற
தூரத்துக் காற்றே  திருவாய் மலர்ந்திடுவாய்

காடு காளனியிடை வாழும் மக்களிடை
நீடு நேரம் நின்றுதான் வந்தனையோ

வீடு வளவின்றி வீதியோரங்களில்
வாழ்கின்ற எம்மவரின் விம்மலினைச் சுமந்தனையோ

நாடு நகரின்றி  நாதி எதுவுமின்றி
பாடாய்ப் படுகின்ற பாவியரைப் பார்த்தாயோ

மோதி வெடித்தங்கு மேனி சிதறிட்ட
கரும்புலிகள் வாழ்ந்தவிடம் கண்டிங்கு வந்தாயோ

கட்டுப் பாடற்ற கனதி மிகு காற்றே
விட்டுச் செல்லுகின்ற விடயம் தான் என்ன என்ன

தூரத்துக் காற்றே துடிக்கின்ற மனசை நீ
ஆரத் தழுவுகையில் எடுத்தியம்பும் சோகமென்ன?

விடிவானம்  தெரிகிறதா ஒளிக்கீற்று பரவிடுதா
நெடுநாள் எம் துயர்கள் நிலைத்திடத்தான் போகிறதா

காற்றே நீ கனக்காதே
காலம் வரும் காத்திருப்பாய்

# தமிழ் எங்கே இனிக்கிறது?

தமிழ் மழலையின் உதடுகள் மகிழ்ச்சியின் துடிப்பால்
மொழிகின்ற சொற்களில் தமிழினிக் கின்றதே

கடலினில் மீனவர் கரைவலை போடையில்
களிப்பொடு கூறும் ஏலேலோ ஏலேலோ - அவர்

உடலினில் பலத்தையும் உளத்தினில் களிப்பையும்
உவப்புடன் கொடுக்கையில் எம்மொழி இனித்ததே

அடம்பிடித் தழுதிடும் அமிழ்துணை மழலையின்
அழுகையை நிறுத்திட அவதிகள் பலபடும்

அம்மையின் உதடுகள் ஆராரோ ஒலித்திட
எழில்மிகு தமிழ்மொழி ஏற்றமாய் இனித்திடும்

நீண்டநாள் ஊடலால் நெஞ்சையே பொசுக்கிய
நாயகன் நாயகி நேர்விழி கண்டதும்

பூண்டஅக் காதலில் புறப்படும் ஓலியலை
மீண்டுமோர் தமிழினில் மென்மையாய் இனித்ததே

தயிர்கடை கன்னியர் கரங்களில் ஒலியலை
தந்திடும் வளையல்கள் தீரமாய் ஓலிக்கையில்

உயிரனைத் தமிழ்மொழி எதுகையும் மோனையாய்
இனிப்புடன் ஒலித்தது ஒலித்தது என்பேன்

ஆயிரம் பொன்னின் அருமையை உணர்ந்த
தருமியின் வறுமையை தீர்த்திட பரமனும்

பாயிரம் பாடியே பெண்தனின் கூந்தலில்
பைந்தமிழ் மணமது புகுந்ததைக் காட்ட

பாவலன் கீரனை பொருதிடும் வேளையில்
பைந்தமிழ் இனித்தது இனித்தது காணீர்

நானெனும் அகந்தையை நீக்கிடும் நோக்கினில்
நாவலின் பழங்களை நாவினால் ஊதிடும்

கூனல் கிழவியாய் ஔவைக் கருளிய
பாலனாம் முருகனின் பைந்தமிழ் இனித்ததே

இப்படி மட்டுமா தமிழ் இனிக்கிறது!

அண்மையில் இங்கோர் பள்ளியின் விழாவில்
தண்மையாய் குடும்ப நாடகம் ஒன்றை

இங்குள்ள மாணவர் மேடையில் ஏற்றினார்
அங்கொரு மழலை இப்படி உதிர்த்தது

"அப்பா வண்டு விட்டார்"
செந்தமிழ் சீமையில் சிக்கிடும் மழலையின்

சுந்தர உதட்டினில் சொரிவதைப் பாரீர் ஆமாம்
"அப்பா வந்து விட்டார்:

செந்தமிழ் மழலையின் உதட்டினில் இனித்தது
சீமையில் குழந்தை தம் சுந்தர உதடுகள்

லகர, நகரம், றகர ரகத்தை ஒலிப்பதில் தமிழ்மொழி
இனித்தது இனித்தது என்பேன்

# வாணி விழா - சிறார்களுக்காக

ஆனைமுகத்தோனே அம்பிகைசற் புத்திரனே
பானை வயிற்றோனே பிள்ளைப் பெருமானே

நம்பிக்கையோடு நாமிங்கு கவிபாட
தும்பிக்கையானே துணைபுரிவாய் மனதார

ஆண்டுகள் தோறும் - தமிழ்ச்சங்க
மாணவர் நடாத்திடும்
வாணி விழாவினிலே - கலந்திட
வருகை தந்திருக்கும்
தாய்க்குலமே தந்தையரே - என்னொத்த
தோழர்களே தோழிகளே

சின்னம் சிறுவர்கள் நாம் - எங்கள்
செந்தமிழ்ச் சொல்லெடுத்து

அன்னை வாணியை வணங்க வந்தோம்
எங்கள் இன்பத் தமிழ் கேட்பீர்

சொற்பிழை பொருட்பிழையை - நீங்கள்
சிந்தையில் கொள்ளாமல்
எங்களை ஆதரிப்பீர் - பெரியோரே
எங்களை ஆதரிப்பீர்

அன்னையே வாணியே அருள்பொழியும் பாமகளே
பண்ணை நான்பாட பாவாகி ஒலிப்பவளே

புன்னைமரப்பந்தலிலே பூமகளாய் பொலிபவளே
கன்னித் தமிழ்மொழியை காவலிடும் தேவதையே

சின்னஞ்சிறார்கள்எம் சிந்தையிலே இருப்பவளே
பிஞ்சுக்குழந்தைகளின் மழலைகளில் ஒலிப்பவளே

வீணைதனில் நாதமதை, விரல்மீட்டும் தூயவளே
வாணியே தாயே வரந்தருவாய் தேவதையே

செந்தமிழின் இனிமைதனை சுந்தரமாய் உரைப்பதற்கு
என்னறிவோ அதிகமில்லை என்றிடினும் முயன்றிடுவேன்

பைந்தமிழில் கவி சமைத்து பக்குவமாய் எடுத்துரைக்க
கையளவு திறன் கொடுத்த கலைமகளே பாமகளே - உன்

கால்தொட்டு அவ்வடிகள் கண்ணில்நான் ஒத்திநின்றேன்
பாமகளே உனைப்பாடிப் பூஜிப்பேன் வாழ்க்கையெலாம்.

கற்பனையில் நெஞ்செழுந்த காவியமே
ஒப்பற்ற தமிழ்மொழியின் உயிர்மூச்சே

சிற்பமதில் உயிர் கொடுக்கும் சுந்தரியே
அற்புதமாய் மனக்கண்முன் ஆடம்மா

மின்னல் கயல்விழியாய் மேனியில் சந்தனமாய்
சின்ன இடையினிலே சீவக சிந்தாமணியாய்

சிவந்த விழிகளிலே சீறும் சிலப்பதிகாரமுமாய்
மார்பின் அணிகலனாய் மணிமேகலையாகி

காதை அலங்கரிக்கும் குண்டலகேசிகளாய்
அசையும் உதடுகளில் ஓர் ஆத்திசூடியுமாய்

பின்னல் சடையினிலே புறநானூறு ஆடிவர
திருப்பாதச்சுவடுகளில் திருக்குறள் தான் தெரிய

நால்வகை வேதங்களை நாற்கரங்கள் காட்டிநிற்க - ஆகா
என்னேன்று கூறிடுவேன் என்தமிழ்த் தேவதையே

கண்ணை நிறைத்து நிற்கும் இக்கற்பனைப் பேரெழிலை
என்னுடன் நீங்களும்தான் இதயத்தில் ஏற்றிடுவீர்

அன்னையே கலைவாணி அறிந்திட்டாய் நம்நிலைமை
உன்னை உதட்டிருத்தி உதிர்த்திடுவேன் சில வார்த்தை

தாயே சிலகாலம் தங்கிடுவாய் சீமையிலே
சேய்கள் பலருக்குச் சிறந்தவழி காட்டிடுவாய்

வெள்ளைக் கலையுடுத்த வேதங்களின் முழுப்பொருளே
உள்ளத்தில் தமிழறிவை ஊறவைக்கும் கலைத்தாயே

படைக்கின்ற பிரம்மாவின் பத்தினியே தாயே
துடைத்திடுவாய் எம்மவர்கள் துயர் நீக்க வழியமைப்பாய்

அன்னையே கலைவாணி ஆயகலை அனைத்தையுமே
உன்னுள் அடக்கிநிற்கும் அற்புதத் திருவுருவே

பிஞ்சுக் குழந்தைகள் பேசிடும் மொழிகளில்
கொஞ்சிடும் காதலர் குலவிடும் பேச்சினிலே

தயிர்கடை கன்னியர் வளையலில் ஒலிப்பவளே
வலையிடும் மீனவர் வார்த்தையில் கலப்பவளே

- நான்
சொன்ன தமிழ்மொழியில் - ஏதும்
சொற்பிழை தானிருப்பின்

மன்னித்து உளங்கொள்வீர் - பெரியோரே
மன்னித்து உளங்கொள்வீர்.

# பள்ளி மாணவி அரங்கில் படிக்கவோர் கவிதை
# வாணி விழா

அன்னையே வாணியே
அருள்பொழியும் பாமகளே
பண்ணை நான் பாட
பாவாகி ஒலிப்பவளே
கன்னித் தமிழ்மொழியைக்
காவலிடும் தேவதையே
சின்னவளாம் எந்தன்
சிறுகவியைக் கேட்டிடுவாய்
சின்னஞ் சிறார்கள் எம்
சிந்தைதனில் இருப்பவளே!
பிஞ்சுக்குழந்தைகளின்
மழலைகளில் மொழிபவளே!
வீணைதனில் நாதமதை
விரல்வழியே தருபவளே
வாணியே தாயே
வரந்தருவாய் தேவதையே

செந்தமிழின் இனிமைதனை
சுந்தரமாய் உரைப்பதற்கு
என்னறிவோ அதிகமில்லை
எனினும்நான் முயன்றிடுவேன்
பைந்தமிழில் கவிசமைத்து
பக்குவமாய் எடுத்துரைக்க
கையளவு திறன்கொடுத்த
கலைமகளே பாமகளே - உன்
கால்தொட்டு வணங்கியே
கண்ணில்நான் ஒற்றி நிற்பேன்
பாமகளே உனைப் பாடி
பூசிப்பேன் வாழ்க்கையெல்லாம்

# என் இனிய யாழ்ப்பாணமே

சுதந்திரத்தின் சுகந்தமது சுவையாத வேளைதன்னில்
மகிழ்ந்திருந்த யாழ்நகரை மனத்தோடு நினைக்கின்றேன்

கல்லூரி என்றுசொல்லி கீரிமலை தனைநோக்கி
கால்கடுக்க சைக்கிளிலே சென்றதைத்தான் நினைப்போமா

வின்சரிலே மென்னிறை வெலிங்டனிலே மறுபடமும்
இன்பமுடனே பார்த்ததனை எப்படிநாம் மறந்திடுவோம்

வை. சி. சி குவினிடை மலாயன் கபேயினிலும்
அரட்டையடித் துண்டதனை எக்கணமும் நினைப்போமா

ஐம்பது சதங்கொண்டு லட்சமது பரிசுபெற
எதிர்பார்த்து அறிவிக்கும் டயமண்டை மறப்போமா

மினிபஸ்ஸில் சவாரியினை முதுகுவலி கண்டதிலும்
இனிமைமிகு சவாரிதனை என்றும்நாம் மறப்போமா

யாழ்நகர் நூலகத்தில் அமைதிமிகு படிப்பகத்தில்
தூங்கிவிட்ட நாட்களினை துன்பமுடன் நினைப்போம்

நல்லூரின் சப்பறமும் தேரொடுநற் தீர்த்தமதும்
எல்லோ இளமையிலும் எப்போதும் வருவதில்லை

குளுகுளுவென சுபாசினில் கதகதப்பாய் றிக்கோவில்
கலகலப்பாய் களித்ததனை கவினோடு நினைப்போமா

கோட்டைமுனி யப்பரிடம் கேட்கின்ற வேண்டுதல்பின்
கோட்டைவிடும் சோதனையை கவலையுடன் நினைப்போம்

# என் இனிய மீன் பாடும் தேனிலமே

கோட்டைமுனைப் பாலத்தில் கூடிநின்று கதைபேசும்
நாட்களினை நினைத்து நம்மனத்தில் இரைமீட்போம்

மாமாங்கப் பிள்ளையாரின் மகத்தான தீர்த்தமெனில்
தாமாக எம்மிளைஞர் தந்திடுவார் தம்வரவை

கொக்கட்டிச் சோலையில்கைக் குத்தரிசி வேண்டியதை
கட்டித் தயிருக்காய் மனம்பிட்டி சென்றதையும்

பச்சைத்தண்ணீரில் பரியாரியின் பவிசான மருந்துகளும்
இச்சமுடன் வெற்றிலைச் சாத்திரத்தின் மகிமைதனும்

விழியால் கதைபேசும் வேல்விழிகள் உறைநகராம்
எழிலான மீன்பாடும் தேனாட்டின் சிறப்பன்றோ

வின்சன்றின் முன்னால் வேகமான சைக்கிளோட்டம்
மின்னலென பிறேக்குக்குத் திரும்புகின்ற கண்களும்

மாரியம்மன் கோவிலொடு தான்தோன்றீஸ் வரனாரும்
வரந்தந்து காத்தருளும் வலிமைமிகு தெய்வங்களாம்

அடல்ஸ் ஒன்லிப்படமென்றால் எம்வகுப்பில் எவருமிரார்
மிதிவண்டி தனைத்தூக்கி மதில்பாய்ந்து தியேட்டர்வரும்

நெஞ்சத்து நினைவலையை நெகிழ்வுடனே நிரப்பிடுதே
மீண்டும் அந்நாட்கள் வராதா என் ஏங்குகின்றோம்.

# இது கவிதையல்ல. மடல்...
# என் அன்புள்ள அம்மாவுக்கு !

மடல் எழுதத்தாள் எடுத்தேன்
மனச் சுமையால் கைநொடிந்தேன்
சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளையடா
என்று அடிக்கடி கூறுவீர்களே!
இந்த ஆண்பிள்ளையால் எனக்கென்ன பயன்
என்று நீங்கள் நினைத்தீர்களோ?.
சாண்பிள்ளை வெளிநாட்டில் சுகித்திருக்க
அடுப்படியில் ஊதாங்குழலூதிய பெண்பிள்ளைகள் -என்
தங்கையர்
உங்களைச் சைக்கிளிலே ஏற்றிக் காப்பாற்றி இருப்பாரே

அண்ணன் வருவான் எம் வாழ்வில் ஒளியேற்றுவான்
என்று ஏங்கிநின்ற தங்கையரே
நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்?
கிளாலிக்கு அக்கரையிலா? இல்லை இக்கரையிலா?
எந்த முகவரிக்கு உங்கள் மடல் வரைவேன்?
ஓ தர்ம தேவதையே1

உன் தராசில் ஓர் தட்டு ஏன் எந்த நேரமும்தாள மறுக்கின்றதே
அக்கினிப் போரல்லவா நாம் நடத்துகின்றோம்
ஓர் மொழிக்காக அல்லவா இந்தத் தியாக வேள்வி.
இறுதி ஈழத்தமிழனின் உயிரையும் உன் தராசில் இட்டால் தான்
உன் தட்டுக்கள் சமனாகுமா?

நாம் பேச ஒரு மொழி
நாம் வாழ ஒரு நிலம்
நிம்மதி நிம்மதி
இது கேட்பது தப்பா
இதற்கு இத்தனை இத்தனை அப்பாவி உயிர்களா விலை?

தமிழீழம் மொட்டாகிப், பூவாகிக் காயாகிக் கனியாகும் போது
தட்டி உடைத்தாரே இக் கயவர்கள்
என் மனக்கண்முன் ஓடி விரிவதெல்லாம்
நாம் வாழ்ந்த மண் என் இனிய பொன்னாடு

எம் எதிரிக்கு எம் மண்மீது எத்தனை ஆசை, கொள்ள ஆசை
எத்தனை முறை எம் மண்ணை முத்தமிட முயல்கின்றான்
தொட்டுவிட முடிந்ததா? தூரத்தே நின்று வெகு தூரத்தே நின்று
நின்று, கண்ணுக்குத் தெரியாத தூரத்தே நின்று
குண்டுகளால் அல்லவா தொட்டுவிட முயல்கின்றான்

தொட்டுவிட முயல்கையில் சிறகொடிந்து
ஆர்ப்பரிக்கும் கடல் பரப்பால் ஓடிவர முயல்கின்றான்
முடிநததா? சற்றேனும் முடிந்ததா? தீப்பிழம்பாய் அல்லவா
முடிந்து போய் கிடக்கிறான்.

அம்மா உந்தனுக்கு மடல் எழுத இன்னும் முயல்கின்றேன்.
நெஞ்சை நிறைப்பதெல்லாம் சாரைசாரையாய் நீங்கள்
யாழ் விட்டு வெளியேறும் காட்சி.
லண்டனில் ஒர் ஊர்வலத்தில்
ஒருவர் கூறினார்.
இப்படித்தானே எம் மக்கள் போயிருப்பார் யாழ் நகரை விட்டு
மற்றவர் கூறினார் இது ஊர்வலம்.
அது பிறந்த பொன் நாட்டையே விட்டோடும் அவலம்.

எமது நாடு, எமது பாசை, எமது நிர்வாகம்,
எமது காவல், எமது படை,
எமது ஆராய்ச்சி, எமது மக்கள், எத்தனை இனிப்பாக
இருந்தது. எமது கடந்த காலம்.

நுழைய முடியாத இரும்புக் கோட்டை அந்த யாழ்குடா
எதிரி தன்பலத்திலா உள்ளே நுழைந்தான். இல்லவே
இல்லை. எமது பலவீனத்தல் தானே நுழைய முற்பட்டான்.

கட்டப்பொம்மனுக்கு ஒர் எட்டப்பன்
பண்டாரவன்னியனுக்கு ஒர் காக்கைவன்னியன்
பிரபாகரனுக்கு மட்டும் விதிவிலக்கா

வரலாற்றில் எத்தனை தடவைகள் நாம்
காட்டிக் கொடுக்கப்பட்டோம்.
தமிழீழம் கனிகின்ற வேளைகளில் எல்லாம்
கட்டாந்தடி கொண்டல்லவா உடைக்கின்றான் துரோகி

வடக்கும் கிழக்கும் சங்கமமாகும் வலயம் இந்த மணலாறு
திட்மாய்த், திட்டமாய் எமைப்பிரிக்க இடையே
குடியேறுகிறான் சிங்களத்தான் அவனை இராப்பகலாய்க்
காக்க ஒரு படை. இப் படையைத் தாக்கத் துணிந்து
தீரமுடன் சென்ற மாதர்படையைக் காட்டிக் கொடுத்தது கயவர் படை.
மணலாற்றில் இறுதி முத்தமிட்ட அந்த வீர மங்கையர்
இன்றிருப்பின் நீர்வேலி நோக்கி நெடுநடை
போடுவானா இந்த இராணுவத்தான்.

தேடி அழிக்கின்ற பகைவனை- அரச படைகளை
தேடி அழிக்கச் சென்ற வேங்கையரை-கோடரிக்காம்புகள்
பரா ஒளியில் காட்டிக் கொடுத்தனரே
மண் மீட்கச் சென்ற மான மறவர் இன்றிருப்பின்
கண் வைப்பானா எதிரி கோப்பாயை நோக்கி

ஒ நெஞ்சு வலிக்கிறது.
நினைக்க நினைக்க நெஞ்.சு வலிக்கிறது.

உலக நாடுகள் எல்லாம் ஓடி ஒடி உதவுகின்றது
இச் சிங்கள அரசுக்கு- ஆனால் எம்மவர்களே
எம் தமிழர்களே எம் நாட்டைக்ட காக்க பெரிதாக
உதவுகிறார்கள் இல்லையே.

எங்கு எங்கு வேங்கைகள் விலகுகிறார்கள்.
எங்கு எங்கு வேங்கைகள் பலம் இழக்கிறார்களோ
அங்கு அங்கு எங்கள் சொந்த வீடும் பறிபோகின்றதே.
தம் சொந்த நவனுக்காகவாவது தன் வீட்டு நலனுக்காகவாவது
இத்தமிழர்கள் இப்புனித போருக்கு
உதவலாம் அல்லவா?

அம்மா என்னால் சுகம் விசாரிக்க முடியவில்லை
முடிந்தால் மறுகடிதத்தில் முயல்கின்றேன்.

இப்படிக்கு
உங்கள் இவ்வயதான காலத்தில் உதவ முடியாதஅன்பு மகன்
(கிளாலி இடப்பெயர்வின் போது என்குடும்பத்தைக்
காணாது தவிக்கையில்...)

# சுனாமி

மார்கழியை நினைக்கின்றேன் மார்பு வெடிக்கிறது
கார்காலக்குளிரங்கு கடும்நோவைத் தந்தாலும்
நத்தார் கொண்டாட்டம் நம்மவரை மகிழ்விக்க
காலனவன் கடற்கோளின் உருவெடுத்தான் ஈழமண்ணில்

கடற்கோளின் கடும்சீற்றம் கவியடங்காப் பெருந்தாக்கம்
இடரொன்று இதுபோன்று இதுகாறும் வந்ததில்லை

பாலன் பிறந்ததினம் பலவாறு கொண்டாடி
ஞாலம் மகிழ்ந்திருந்த நாளன்றின் மறுநாள்தான்

கோலம் இதுவென்று கொக்கரித்தாள் கடலன்னை
காலம் உள்ளவரை கடற்கோளை யார்மறப்பார்

அன்னமிட்ட கடலன்னை அரக்கியென ஆர்ப்பரித்தாள்
கன்னமிட்ட கள்வனைப்போல் காவுகொண்டாள் எம்மவரை

கடல் உள்ளே செல்லுதென்று கதைகேட்டு கடலோரம்
உடன்சென்ற அனைவரையும் காவுகொண்டாள் கடலன்னை

பாதையிலே நடந்தோரும் படுத்துறங்கி அயர்ந்தோரும்
கடைவழியில் நின்றோரும் கடலோரம் சுகித்தோரும்

துன்பமெலாம் நீங்கி துயரெல்லாம் மறைந்தொழிந்து
இன்பமது வந்ததென உளம்மகிழ்ந்த எம்மவர்கள்

வானுயர அலைபரப்பி ஊழிக்கால அழிவதுபோல்
தானுயர்ந்து எம்மவரைத் தன்னகத்தே அழித்தானோ

கண்முன்னே தான்பெற்ற கைக்குழந்தை கைதவற
கையிரண்டும் கொள்ளாது மறுபிள்ளை கையகல

அம்மாவென் றலறலுடன் கண்ணேங்கக் கடலிழுக்க
சும்மாநான் நின்றேனே என்றலறும் தாய் கண்டோம்

தாயிழந்த பிள்ளைகளும் சேயிழந்த தாய்மாரும்
பொட்டிழந்த மனையாளும் பூவிழந்த பாவையரும்

இல்லாளை, தான்பெற்ற பூப்போன்ற மழலைகளை
சொல்லாமல் தனைவிட்டுப் பிரிந்திட்ட உறவுகளை

கல்லான நெஞ்சோடு கனகனக்கும் உளத்தோடு
சொல்லாமல் கண்வழியே சொல்கின்ற தந்தையரை

பேர்சொல்லப் பிறந்திட்ட பேரனையும் - தன்மடியில்
தாலாட்டி உறங்கவைத்த பேத்தியையும் பிரிந்தங்கு

நான்வாழ்ந்து என்னகண்டேன் எனக்கூறிக் கடல்நோக்கி
தான் சாகத்துணிந்திட்ட தாத்தாமார் பாட்டியரை

தமிழீழத் தாய்மண்ணில் தான் கண்டேன் என்சொல்வேன்
அமிழ்தான எம்மவர்கள் அவலந்தான் வாழ்க்கையதோ

கடலம்மா! கடலம்மா! கண்ணிறைந்த கடலம்மை!
உடல்நோவும் உளநோவும் உடன்போக்கும் கடலம்மா!

நீளப்பட்டாடை கொண்டு நீடுதுயில் கொண்டிருந்து
ஆளப்பெரு மூச்சோடு எழில்நுரையை இடைகக்கி

தொழில்நோக்கிப் படகேறித் தாம்வாழ வந்தவரை
அழிவின்றி எந்நாளும் உயிர்வாழச் செய்தவளே

திடமாய் எம்தாயென்று தினமென்றும் சொன்னஎமை
சடமாக்கி சவமாக்கி சரித்திரமாய் ஆக்கினையோ

கடல்தாயே! கடல்தாயே! காவுகொண்ட கடல்தாயே
ஒன்றிரண்டு போயிருந்தால் ஒப்பாரி வைத்திடலாம்

ஊரே உன்செயலால் அழிந்தொழிந்து போனதம்மா
ஒப்பாரி வைக்கஇங்கு ஊரே இல்லையம்மா

வானலையில் தொலைக்காட்சி வந்திட்ட செய்தியெலாம்
போனதொரு பொய்யாக போயிடாதோ என்றிருக்க

அன்னையொடு தந்தை, அக்காமார் அண்ணன்மார்
பெற்றெடுத்த பிள்ளைகள், ஆச்சியொடு அப்புமார்

மாமியொடு மாமாமார் மருமக்கள் உற்றார் உறவினர்கள்
ஊரோடு கடலோடு ஒன்றாகிப் போனசேதி

வேரோடு விழுதோடு வாழ்விழந்து போன செய்தி
காதோரம் வந்து கதிகலங்கிப் போனோமே

கோயிலது கோபுரங்கள் குடைசாய்ந்து போனதம்மா
ஆலயத்தின் தேர்கூட அரைக்காதம் நகர்ந்ததம்மா

செஞ்சோலைச் சிறார்கள்பலர் சீறிநின்ற கடலலையில்
பஞ்சாகிப் பிரிந்தழிந்து போகினரே கடலோடு

நெஞ்சை நிறைந்துநின்ற நீள்கவிதை கேட்டோர்க்கு
நெஞ்சம் பணிந்து நன்றிதனை நான்சொன்னேன்.

# மடமையை ஒழிப்போம்

தலைவன் இறந்தவுடன் தாமும் அத்தீயில் வெந்து
தன்னுயிர் மாய்க்கும் எங்கள் தலைவியர் கண்டோமன்று

கண்ணகி வழியில் வந்த கற்புடைப் பெண்கள் என்று
எண்ணிநாம் போற்றி வந்தோம் அதுஒரு காலந்தானே

கற்பினைக் காட்டவென்று குளித்தனர் தீயின் உள்ளே
பொற்புடை மாந்தர் செய்த பெருமையும் பேசி நின்றோம்

ஆண்டுகள் பலவும் ஓடி ஆண்களின் சமமமாய் நின்று
மாண்பொடு கடமையாற்றும் மிலேனியம் காலந்தன்னில்

கணவனின் இறப்பின்போது காதலால் மனைவி தானும்
பிணத்தின் மேல் தாலிதன்னை போட்டிட வற்புறுத்தும்

அரக்கர்கள் கூட்டம் முன்னே ஆறுதல் சொல்வாராரோ
உரக்கவே துயரால் விம்மும் உத்தமி என்ன செய்வாள்

புதுயுகம் தன்னில் வாழும் பைந்தமிழ் மக்கள் நாங்கள்
மடமையைப் போக்கி அவர்தம் மனத்தின்நோ காயவைப்போம்

திரைப்படங்களிலே சோகம் தேவையாய்க்கருதி அங்கு
விதவையின் வளையல் தன்னை வெறுப்புடன் உடைக்கும் காட்சி

வாழ்க்கையில் ஏற்கஒண்ணா வதையெனச் சொல்வேன்இங்கு

# சுதந்திர தமிழீழத்தில் ஒரு சுற்றுலா

நினைக்க இனிக்கும் தலைப்பை எடுத்து
இனிக்க இனிக்க கவிகள் சமைக்க
என்னைப் பணித்த வானலையே ஐ பி சி யே
உனக்கு வணக்கம் ஏற்றிடுவாயே

சுதந்திரத் தமிழீழத்தில் ஓர் சுற்றுலா
காலை எழுந்து கடன்கள் முடித்தேன்
சாலை ஓரம் நின்ற நண்பனின்
காரில் ஏறி ஹீத்துறூ சென்றேன்
பாயும் புலிக்கொடி பளபளத்திருக்க தமிழ்
ஈழம் எயார்லைன்ஸ் தனித்துவத் தோற்றம்
உள்ளே சென்ற என்னை அழைத்தது
வணக்கம் வாருங்கள் வாயெல்லாம் புன்னகை
சேலை அணிந்தொரு நங்கையின் புன்னகை
சிலிர்த்தது மேனி தமிழ்மணம் கண்டு
இருக்கை அமர்ந்த எனசெவி குளிர
எழில்தமிழ் சொற்கள் வானில் வந்தது
காதில் பொருத்திக் கண்களை மூட
தேன்தமிழ்ப் பாடல்கள் தெளிந்து வந்தன
நெஞ்சு நிறைந்த நினைவினில் நானும்
நல்ல உறக்கம் கொண்டே எழுந்தேன்
பலவகை உணவுகள் பலபல சுவைகளில்
வடையொடு மோதகம் வாய்ப்பன் சூசியம்
கமகமவென மணம் கமழ்ந்து வீசிக்
கையதில் தாங்கி சிலையென நின்றவள்
அழகினை வியந்து அரைநொடி கிளர்ந்து
எதைஎதை விடுக்க எதைஎதை உண்ண
என்று சிலநொடி அவதிகள் உற்று

அனைத்தையும் உண்டு அரைமூச் செடுத்து
அமைதியாய் உறக்கம் கொண்டும் எழுந்தேன்
உண்டகளை ஓர்புறம் ஓடிப் புகமுன்
அறுசுவை சாதம் அப்பளப் பொரியல்
வடையொடு வடகம் வந்து நின்றது
மீண்டும் ஓர்பிடி பிடித்து முடித்தேன்
ஆகா ஈழம் இத்தனை இனிப்பா
இத்தனை உயர்வானில் இத்தனை சுவையா
தேனெடு குரலால் வந்த அறிவித்தல்
தேனாய் மீண்டும் தந்து நின்றது
சின்னப் பனைகள் பெரும்பனை யாகி
ஈழம் எயார்லைன்ஸ் இறங்கி நின்றது
கிட்டு இன்ரநசனல் எயார்போட்
கணீரென முன்னே விரிந்து தெரிந்தது
முன்னர் கண்ட பற்றைகள் எல்லாம்
முழுதாய் விலகிய பலாலி தெரிந்தது
எங்கள் மண்ணில் மிதித்த உவகையில்
என்னை மறந்தேன் உள்ளம் சிலிர்த்தேன்
எத்தனை வருடப் பிரிவின் பின்னால்
எந்தன் மண்ணில் மிதித்திட நின்றேன்
இத்தனை தூரம் உயர்வினைத் தந்த
எத்தனை வேங்கைகள் உயிர்களை நினைத்தேன்
எம்மண் மீட்க நெஞ்சினை வெடித்த
கரும்புலி வீரர் தியாகம் கண்டேன்
எம் மண் மீட்பே தம்மூச் சென்ற
எங்கள் மக்களின் இதயம் கண்டேன
கடலில் மண்ணில் காவியம் படைத்த
கரும்புலி வீரரைக் கணத்தில் கண்டேன்
செம்மணிச் சுடலையில் சமாதியாய் நிற்கும்

எம்மண் தந்த உறவினைக் கண்டேன்
இரவும் பகலும் உறக்கம் விழித்து
எதிரியை விரட்டிய எம்மவர் கண்டேன்
தாய் நாட்டுக்காய் தியாகம் புரிந்த
தம்பியின் படைகளின் உறுதியைக் கண்டேன்
கண்முன் கற்பனை நாட்டினை எண்ணிக்
காவியம் படைத்த காலமும் போயின
என்முன் விரிந்த ஈழத்தாய் மண்
எழில்தனைக் கண்டு என்னை மறந்தேன்
இத்தனை பேரின் இதயம் நிறைந்த
எங்கள் தலைவன் தம்பியைக் கண்டேன்
கண்களை நிறைத்தன கண்ணீர்த் துளிகள்
விண்ணென நெஞ்சு வலியால் துடித்தது
சுயநலம் மிக்க எந்தனை எண்ணி
உடலும் ஓர்கணம் குறுகிப் போனது
எத்தனை உயிர்கள் எடுத்த தியாகம்
இத்தனை முத்தாய் ஈழம் தந்தது
அத்தனை பேரின் முன்னால் என்னுளம்
மீண்டும் குறுகி மடிந்து நின்றது
இராமன் அணைக்கும் ஓர்அணில் உதவி
புரிந்த செயல் போல் நானும் செய்தேன்
என்ற திருப்தியில் அடங்கிப் போனேன்
ஈழ மண்ணின் இனிய சுதந்திரம்
நாளும் வேண்டி நின்றதன் பலன்
வாழும் எங்கள்காலம் மலர்ந்ததை
நாளும் பொழுதும் நினைத்து மகிழ்ந்தேன்
ஈழம் தந்த இனிய தியாகிகள்
ஆழ்ந்த உறக்கம் கொண்டு விளங்கும்
கோப்பாய் மண்ணை கண்முண் நினைத்தேன்

கண்கள் பனிக்க கலங்கிட நின்றேன்
எமக்காய் வாழ்ந்து இன்னுயிர் நீத்த
இனிய உறவுகள் எம்முன்
பலாலி வீதி பலவகை அழகுடன்
பளபள வீதியாய் பொலிவுடன் தெரிந்தது
வீதியின் இருகரை வேங்கைகள் பாதைகள்
வீரம் செறிந்து விழிப்புடன் நின்றன
வீதிப் பெயர்கள் வரிப்புலி நாமம்
விளங்கி எம்மண் வீரம் சொன்னது
எங்கும் தமிழ்மொழி எதிலும் தமிழ்மொழி
பொங்கும் தமிழ் மணம் பரவி நின்றது
உணவகம் வெதும்பகம் காப்பகம்
முடிதிருத்தகம் பல்பொருள் அங்காடி
அப்பப்பா தமிழ்மொழி ஆனந்த தாண்டவம் ஆடியது
நாட்டின் உள்ளே சென்றேன் உள்ளம் வியந்தேன்
காண்பது நனவா கண்டது கனவா
கிள்ளி என்னை உணர்ந்திட நின்றேன்
கடலை நோக்கி மீன்பிடிக்கச் சென்றிடக்கண்டேன்
கட்டுமரம் காற்றிலாடும் அழகினைக் கண்டேன்

ஏலேலோ பாட்டுடன் வலை இழுத்திடக் கண்டும்
மக்கள் அள்ளி மீனைக்கரையெறியும் அழகினைக் கண்டேன்
வயலினிலே நாற்றுநடும் வனிதையர் கண்டேன் அவர்
கரங்களிலே ஒலியெழுப்பும் வளையலைக் கண்டேன்
பாம்பனொடு எட்டுமூலைப் பட்டங்கள் கண்டேன்- அங்கு
பின்னால் ஓடும் சிறுவர்களின் பரவசங் கண்டேன்
வட்டநிலாக் காட்டி நிற்கும் தாயினைக் கண்டேன்- அங்கு
வாயார உண்டு நிற்கும் மழலையைக் கண்டேன்
முட்டிமடி உறிஞ்சி நிற்கும் கன்றினைக் கண்டேன்- அதை
உச்சிமுகர்ந்து பாலூட்டும் பசுவினைக் கண்டேன்

வயலினிலே ஏர் இழுக்கும் எருதினைக் கண்டேன்- நெற்றி
வியர்வையொடு ஏரோட்டும் உழவனைக் கண்டேன்

வயல் குளங்கள் நீர் நிறைந்து நின்றிடக் கண்டேன்-அங்கு
அம்மணமாய் நீந்தி மகிழும் சிறுவரைக் கண்டேன்

கம்பு கொண்டு துரத்துகின்ற தாயினைக் கண்டேன் - கையில்
எட்டாமல் ஓடுகின்ற சிறுவனைக்கண்டேன்

பந்தடித்து விளையாடும் பாலர்கள் கண்டேன் -அவர்
விந்தை விளையாட்டுக்கள் ஆடலைக் கண்டேன் - சிறுவர்

கல்லெறிந்து மாங்கனியை வீழ்த்துதல் கண்டேன் - அவர்
பாதிபாதி கடித்து உண்ணும் பாங்கினைக் கண்டேன்

வயல் வெளியில் ஏற்றுகின்ற பட்டங்கள் கண்டேன் - பாதி
நூலறுந்து காற்றிலோட விரட்டுதல் கண்டேன்

கோயில் மணி ஒலிக்க ஓடும் சிறுவர்கள் கண்டேன் - அவர்
சங்குமூதி சேமக்கலம் அடிப்பதைக் கண்டேன்

ஆலயத்தில் அர்ச்சிக்கும் அந்தணர் கண்டேன் - அவர்
அருளொழுகும் அறிவுரைகள் உதிர்ப்பதைக்கண்டேன்- அங்கு

பொங்கிவழி கின்ற பல பானைகள் கண்டேன் - மாதர்
படியளந்து பச்சரிசி போட்டிடக் கண்டேன்

படைத்துநின்ற மக்களது பக்தியைக் கண்டேன் - அவர்
அடைந்துநின்ற இன்பமதை முகத்தினில் கண்டேன்

தேவாரம் பாடுகின்ற சிறுவர்கள் கண்டேன் - மேனி
வியர்வை ஓடப் பாடுகின்ற பாங்கினைக் கண்டேன்

வீதியெங்கும் அறிஞர்களின் சிலைகளைக் கண்டேன் - அங்கு
மாவீரர் உருவங்கள் மிளிர்ந்திடக்கண்டேன்

வீடுகளில் விருந்தோம்பும் மாதரைக்கண்டேன் - போதும்
போதுமெனஉபசரித்த பாங்கினைக் கண்டேன்

ஆத்திசூடி சொல்லி நிற்கும் ஆசான் கண்டேன் - அவர்
காத்திராமல் ஒப்புவிக்கும் மாணவர் கண்டேன்

குழையேற்றி அசைந்துவரும் வண்டில்கள் கண்டேன் - அங்கு
சலங்கைஒலி கலகலக்கும் எருதுகள் கண்டேன்

கீரிமலைக்கேணி கலகலத்திடக் கண்டேன் - கரையில்
கடலையொடு பனங்கட்டி விற்பதைக் கண்டேன் - மக்கள்

உழுந்துவடை கடித்து தேனீர் உறிஞ்சலைக் கண்டேன்- அவர்
உலக அரசியல்கதைகள் கதைப்பதைக் கண்டேன்

செஞ்சோலை பாமரிக்கும் சிறுவர்கள் கண்டேன் - இங்கு
சிரித்துமகிழும் குழந்தைகளில் தம்பியைக் கண்டேன்

புனர்வாழ்வு கொடுத்து நின்ற கழகங்கள் கண்டேன் - அங்கு
போதும் போதும் என்று சொல்லும் மக்களைக் கண்டேன்

விஞ்ஞானம் வளர்ந்து நிற்கும் அழகினைக் கண்டேன் - அங்கு
வீதியெங்கும் மோபைல் கிணுகிணுத்திடக் கண்டேன்

கடைகளெங்கும் கணணிகளின் வளர்ச்சியைக் கண்டேன்
காணாத பலமுயற்சி கண்டு மகிழ்ந்தேன்

அன்புள்ள காதலிக்கு!

அன்புடையேன் வரைவது,
நலம். நலந்தானே!

நானுனை நினைந்து ஏங்குகின்றேன்.
நீயெனை நெஞ்சில் நினைந்தாயோ

விட்டுவிட்டுனை வந்துவிட்டேன்
விட்டுவிட்டேங்குது என் மனசு

சிட்டுக்குருவியாய் நாம்வாழ்ந்த
சிற்றூர் தன்னை மறப்போமா

பட்டாம் பூச்சிபோல் வாழ்ந்த
பள்ளி வாழ்வை நினைப்போமா

கோயில் என்றும் வயல் என்றும்
நாளும் உன்னைக் காண்கையில் நான்

ஆயுள் பூராய் உன்னருகே
வாழும் நாளை நினைத்தேனா

சின்னக் கதைகள் நீசொல்ல
சிந்தையுடன் அதை நான் கேட்க

செல்லச் சிரிப்பு நீகாட்டி
சொக்க வைத்ததை மறப்போமா

நல்ல பண்டம் வீட்டினிலே
நல்லாய் நீங்கள் செய்கையிலே

என்னை நினைத்து அதை ஒழித்து
சின்னச் சரையாய் மடியினிலே

சொருகி வந்து தந்ததனை
சிறிதும் எங்கே மறப்பேனோ

கோலமயிலாய் நீநடக்க
கொழுத்தும் நெஞ்சாய் நான்பார்த்தேன்

வாலைக்குமரி நீஎந்தன்
வாலிபத்தின் வசந்தமானாய்

கூவும் குயிலுன் குரல் கேட்டுக்
கூவ மறந்துன் குரல் கேட்ட

நாளும் உந்தன் குரலுக்காய்
நானும் நாளும் ஏங்குகின்றேன்

பொல்லா அண்ணன் கண்களிலே
எல்லா முறையும் மண்தூவ

எல்லாப்பொய்யும் எடுத்தியம்பி
சொல்லாநின்றதை மறந்தோமா

காலம் எல்லாம் இளமையுடன்
வாழும் வாழ்வை இறைதந்தால்

நாளும் பொழுதும் அவனுக்காய்
நல்ல கவிகள் நான் படைப்பேன்

சின்ன விழிகள் நீ அசைத்து
சில்மிசங்கள் செய்கையிலே

உன்னைநானோர் குழந்தையென
என்று எண்ணும் நிலை கண்டேன்

வண்ண மயிலே நறுமலரே
வந்தென் கனவில் தோன்றாயோ?

எண்ண மெல்லாம் நீநிறைந்து
ஏங்கும் என்முன் வாராயோ

ஆயிரம் ஆயிரம் மைல் தாண்டி
அன்பே உன்னை வந்தடைவேன்

அதுவரை எந்தன் மடல்கண்டு
அடிக்கடி பதிலைத் தந்திடுவாய்

சிந்தை நிறைத்த சுந்தரியே
உந்தன் உள்ளம் என்னிடமே

வந்துன் கரங்கள் நான்பற்றி
வரித்திடுவேன் வெகுசீக்கிரமே!

# கோட்டைக்குச் சென்றிட....

கோட்டைக்குச் சென்றிடக் கொள்பிட்டியில் - நான்
நாட்டமின்றி நெரிசல் பஸ் எடுத்தேன் - அங்கு

வாட்டமுடன் நின்ற பெண்ணொருத்தி - ஒரு
ஆட்டமொன்றாடி அங்கு நின்றாள் - அவள்

தீட்டிய உதட்டுச் சாயமென்றன் - பின்
சேட்டினில் வர்ணங்கள் தீட்டிவிட - அவள்

பூட்டிய கைப்பையின் உள்ளிருந்து -குடை
நீட்டி என் விலாவில் இடித்ததுவே - அங்கு

வாட்டியது அவள் வியர்வை மணம் - அதைப்
போட்டியில் வென்றது சென்ற் மணம் - பெண்களே

நாட்டினை ஆண்டிடப் புறப்படுங்கள் - என்று
தீட்டிய பாரதி இன்றிருந்தால் - இவள்

காட்டிய கோலத்தின் வேதனையால் - கவி
மாற்றியே பாடித் தீர்த்திருப்பான்

# தமிழர் திருநாள்

தந்தம் முறித்துத் துன்பம் துடைக்கும்
தொந்தி வயிறனே தூப கணபதியே!
இங்கென் கவிக்குள் உன்சுழி தந்து
நன்கு பாடிட நாவசைத் திடுவாய்

ஆயிரம் ஆயிரம் மைல்களுக் கப்பால்
பாயினும் பாடிப் பலவழி தொழுது
நாளும் பொழுதுமென் நலனையே எண்ணும்
தாயே அன்னையே தாள்பணி கின்றேன்

பொங்கு என்றொரு பாவினையாத்து பொங்கிடு என்றெனை
பாடப் பணித்த பங்கய மணாளப் பெயர்தனைத் தாங்கி
என்றும் வாழ்வில் ஓர்வழி நின்று சிந்தும் கவிபல
சீமைக் குழந்தைகள் நன்கு ஆடிட அவர்வழி தந்து
என்றும் எந்தன் உளத்தொடு கலந்த புலவர் பெருந்தகை,
உந்தன் தலைமை என்றென் கவிக்கு நன்று நன்றென
நான் கூறுவனே.

என்னோடு கவிபாட, இங்கே வருகைதந்த,
பொன்னேடு பறித்த புலவீர்காள்
உங்கள் எல்லோர்க்கும் என் வணக்கம் ஏற்றிடுவீர் நான்பாட

பொங்கல் விழாவினைப் பார்த்து மகிழ்ந்திட
எங்கிருந் தெல்லாம் இங்கு குழுமிடும்
பெரியோர் அறிஞர் அன்னையர் சோதரர்
சிறியேன் வணக்கம் சொல்லியே நிற்கிறேன்

பொங்கு என்று பெருமையாய்க் கூறினீர்
எங்கே பொங்கு எவற்றில் பொங்கு
வீட்டு முற்றத்திலா அன்றி உள்ளத்திலா

அந்த நாட்களில் பொங்குதல் என்றால்
இன்புறு சர்க்கரைப் பொங்கலை என்போம்

அந்நாள் எமக்கோர் பொன்னாள்
அண்ணன் தம்பி அன்னை தந்தையும்
சின்ன வயதினில் சந்தைக்குச் சென்று

மட்குடம் தன்னை மெல்லெனத் தூக்கி
நெட்டு விரலை நம்புறம் திருப்பி
நொட்டு நொட்டென மொழியினால் தட்டி
மெல்லொலி கேட்டு மகிழ்வுடன் தூக்கி
வந்திடும் நாளை எங்கனம் மறப்போம்.

பட்டாஸ் கடையையோர் பரவசப் பார்வை
மத்தாப்பு வாணம் அட்டைச் சுருளொடு
வட்டப் பெட்டியும் கம்பிப் பூவிறீஸ்
ஈக்கில் நீளமாய்க் குருவியா காசமும்
மெத்தன வாங்கி மறைத்துச் சட்டையுள்
பொத்தியே கொண்டு பரணிலே ஒளித்து
எப்போ புலரும் எப்போ விடியும்
எங்கள் வெடியொலி ஊரினை எழுப்பிடும்
என்ற எண்ணமாய்த் தூக்கமும் மறந்து
கொஞ்சம் விடிந்ததும் கட்டிலால் குதித்து
நாம் தான் அன்றைய சாவற் கோழியாய்
மண்ணெய் விளக்கினை ஜன்னலில் வைத்து
வட்டப் பெட்டியை வடிவுற உடைத்து
சட்டெனத் திரியைக் கொழுத்தி எறிவதில்
எத்தனை இன்பம் எத்தனை சுகங்கள்

இத்தனை சத்தமும் அருகினில் கேட்டதால்
அண்ணன் தம்பியும் அனைவரும் எழுந்து
தம்பங்குக்கு வெடிகள் கொழுத்திட
தங்கைகள் காதை பொத்தி மகிழ்ந்திட
சின்னஞ் சிறிசுகள் கீச்சிட் டலற
அன்னை தந்தையெம் ஆக்கினை தாங்காது
அத்தனை வெடியையும் அள்ளிப் பறித்து
எட்டா உயரம் எட்டி வைத்திட
அதனிலோர் ஏக்கம் எத்தனை ஏக்கம்
இது மட்டுமா இல்லை இல்லை

இத்தனை குளப்படி இப்போ போதும்
இங்குவா ருங்கள் பொங்கலைப் பொங்கிட
வந்திங் கெமக்கு உதவிகள் செய்வீர்
என்றதைக் கேட்டு உடல் முகம் கழுவி

நன்றென உடுத்து நல்ல பிள்ளையாய்

செந்நிறம் மேலிட்ட செங்கல் தூளையும்
வெள்ளை அரிசி மாவினை எடுத்து
உலக்கை ஓரமாய்க் கோலங்கள் போட்டு
இட்டமாய்ச் சூரியன் வட்டமாய் போட்டு
கண்ணொடு மூக்கும் கவினுற வைத்து
வாசல்கள் நான்கும் வளையவே வைத்து
எம்மையோர் சிப்பியாய் உள்ளம் மகிழ்ந்து
உள்ளம் குளிர்ந்த நாட்களை மறப்பதோ

தலைவா ழையினைக் கேட்டிடும் தாயின்
ஆசையை போக்க அடியிலை மடக்கி
அங்கோர் வெட்டைத் தொங்கியே வெட்டி
எடுத்து வந்ததை எப்படி மறப்போம்

அன்னையின் பொங்கல் அசைந்து சரிகையில்
அடுத்தடுத்து நாம் வெடிகள் எடுத்து
அங்கோர் பீப்பா அதனுள் போட்டு
சன்னமாய் எழும் சத்தம் அதிலே
எங்கள் உடலெலாம் சிலித்து மகிழ்ந்து
அப்பப்பா அதில் எத்தனை இன்பம்

ஆதவனுக்கோர் பொங்கல் படைத்திட
அன்னை தந்தை அன்புடன் வேண்ட
வாழை யிலையனில் பொங்கல் படைத்து
வெற்றிலை சூடம் ஊது பத்தியொடு
சாம்பி ராணிப்புகை காட்டி மகிழ்ந்து

கதிரவனைக் கை கூப்பித் தொழுதிட
தேவாரம் பாடெனத் தந்தை முழங்கிட
அக்கா அண்ணையை அண்ணை தங்கையை
ஆளைச் சாட்டிப் பாட மறுத்திட
தந்தை உறுக்கலில் தம்பி தொடங்கிட
தம்பியின் பாடலை நாமும் தொடர்ந்திட
வியர்வை வழிந்து கரம்வழி ஓட
அப்பாடா ஏதோ ஒலிம்பிக் வென்றதாய்
எண்ணம் உள்ளத்தில் ஓங்கி ஒலித்திட
அன்னையின் படையலை அகமகிழ்ந் துண்டு
அளாவி மகிழ்ந்ததில் எத்தனை இன்பம்

அம்மா ஒருக்கால் அயலிடம் சென்று
உடனும் வருவேன் என்றொரு பொய்யை
எடுத்துச் சொல்லி இலகுவாய் நழுவி
உறவினர் வீட்டுப் பொங்கலை ருசிக்கக்
கவளம் எடுத்து கடித்து ருசித்து
அவரவர் பொங்கலில் விமர்சனம் செய்து
கப்பல் கதலி இதரை மொந்தனும்
எத்தனை வாழைப் பழங்களைத் தள்ளி
உண்டு மகிழ்ந்ததை எப்படி மறப்போம்

பொங்கின வர்க்கோர் பானைப் பொங்கலே
பொங்கா தவனுக் கெத்தனை பொங்கல்
அண்ணை அத்தான் தம்பி வீடென
ஆளுக் கொருவராய் பொங்கல் தந்திட
எத்தனை ருசி அதில் பரமா னந்தமே

பாதி கதிரவன் மோதி மறைகையில்
பக்குவ மாய்வெடி மத்தாப் புவகை
அட்டைச் சுருளொடு கம்பிப் பூவிறிஸ்
ஆலய மதில்பின் அணைத்து ஒழித்திட
எப்போ இரவுப் பொங்கல் தொடங்கிடும்
ஏங்கியே நாமும் நேரங் கழித்திட
அம்மா அக்கா அயலார் சொந்தம்
அரிசி பானையொடு ஆலயம் அடைய
அடுப்புகள் வைத்துப் உலைதனை வைத்திட
அந்த மகிழ்வினில் உள்ளம் சிலிர்த்திட
அதன் விளைவுகள் எம்மிடை தொடங்கிட

சர்ரென ஈக்கில் வானமொன் றெழும்பிட
சத்தமாய் மத்தாப்பு சுத்தி விழுந்திட

சின்னம் சிறிசுகள் சுத்திடும் கரங்களில்
கம்பப் பூவிறிஸ் காட்டி மகிழ்ந்திடக்

மூலவெடி ஒன்று காதைப் பிளந்திட
கிழடு கட்டைகள் கத்திக் குளறிட

நாங்களும் சேர்ந்து ஒலமிட் டலற

பெடியளே வெடிகளைக் கொண்டோடு ங்கள்

நெடிய சத்தமாய் நன்கு திட்டிட
அந்த மகிழ்வினில் இன்னும் கொழுத்திட
அதைவிட இன்பம் எங்குதான் உண்டோ .

அந்த நாட்கள் இன்னமும் நெஞ்சினில்
இன்பத் தேனினை அள்ளி வழங்குமே

இன்னமும் ஒர்முறை இன்புற நாட்கள்
வந்திடா தாவென ஏங்கிட வைக்குதே

இன்னொரு பொங்கலை எண்ணிடும் வேளையில்
கண்கள் பனித்திட நெஞ்சம் அடைக்குதே

சீனவெடியினை சிதறியெறிந்திடும் சின்னஞ் சிறுசுகள்
பிஞ்சுக்கரங்களில் சன்னஞ் சிதறிடும் A K 47

பெடியனின் தலையினை மிஞ்சும் உயரமாம்
பிடித்திடும் பெருத்துப் பாக்கியின் உயரம்

கனிவுறு முகத்தைக் கொண்டவப் பாலகர்
கண்களில் தீவிரம் கைகளில் உறுதி

பகிடி விட்டிட நினைத்திடா நெஞ்சு
பொங்கிடும் ஈழம் காண்பதில் உறுதி

எத்தனை குறுகிய கால வேளையில
எத்தனை மாற்றம் எம்மவ ரிடையே

பொங்கிட முத்தம் கூட்டி மெழுகையில்
எங்கிருந் தோவரும் செல்லடித் தாக்குதல்

அங்கும் உயிர்தனைக் காத்திடும் போதிலும்
காலன் உருவிலே பொம்பரின் தாக்குதல்

வெடிக்கடை எல்லாம் தூர்ந்து போயின
பொங்கல் அரிசியோ பவுண்விலை கூறினார்

பொங்கல் பானை வனைந்திடும் குயவன்
பசிதனை ஆற்றிப் பலநாட் கழிந்தன.

அன்னை தந்தையர் பொங்கலை மறந்து
அடுத்த நேரம் உணவினை எண்ணினர்

சின்னஞ் சிறுசுகள் சென்றியைக் காக்க
அன்னை தந்தையர் அமைதியை நோக்க

ஈழவர் பொங்கலை எண்ண மறந்தனர்
இனியொரு பொங்கலை ஈழவர் நினைப்பில்

தனியொரு ஈழம் அமைந்ததன் பின்னே
அதுவரை எமக்குக் கண்ணீர்ப் பொங்கலே

கவிதையைக் கேட்டு கலங்காத் தமிழரே
இதுவென் னுளத்தின் உணர்ச்சியின் கோலம்

ஈழத் தவரையும் ஒருகணம் எண்ணித்
தமிழர் திருநாள் களித்திடு வீரே .

# பள்ளி மாணவி அரங்கில் படிக்கவோர் கவிதை தைப்பொங்கல் மடல்

அன்றொருநாள் எமக்கோர் வாழ்த்துமடல் வந்தது
அதைப் பார்த்தேன், பிரித்தேன் படித்தேன் ரசித்தேன்
விளித்தேன் திகைத்தேன்

பட்டொளி வீசும் பகலவன் மேலே
பார்த்து அதை வணங்கும் தந்தையர் கீழே
பானையை வைத்துப் பொங்கிடும் தாயவள்
பட்டாசு கொழுத்தி மகிழ்ந்திடும் சிறுவன்
பூவிரிஸ் கம்பியைச் சுழற்றிடும் சிறுமி - அதைப்
பார்த்து மகிழும் சிறுவர் குழாம்
அனைத்தையும் தாங்கிய அழகிய மடலது

எனக்கது விளங்கலை அன்னையைக் கேட்டேன்
அன்னையின் பதிலது நீண்டு வளர்ந்தது
எமக்கொடு நாடு எமக்கொரு தாயகம்
எமக்கொரு வீடு எல்லாம் இருந்ததாம்

இடையிலே புகுந்த எதிரியின் செயலால்
அனைத்தும் இழந்தனம் இங்கே வந்தனம்
அன்னை விளக்கிய எம் தாய்நாடு
சின்னப் பிள்ளை நான் சிந்திப்பேனா
கொஞ்சம் வளர்ந்ததும் கனக்க விளங்குமாம்

# தை மகளே வருக

தை மகள் வந்தாள் - அவனியில்
தை மகள் வந்தாள்
மார்கழிப் பனியினில் மேனி குளித்திட
காரிருள் நீக்கியே காரிகை வந்தாள்

தை மகள் வந்தாள்
துன்பமே வாழ்வாய் துவண்ட எமம்வர்
இன்பமே காணத் தைமகள் வந்தாள்

தைமகள் வந்தால் வழிதனும் பிறக்கும்
வழிதனும் பிறந்தால் துயர்தனும் நீங்கும்
துயர்கள் நீங்கினால் தொடர்ந்திடும் இன்பம்

காட்டிடை வாழும் நம்மவர் எல்லாம்
வீட்டினில் பொங்கும் வாழ்வது பிறக்கும்
சுற்றமும் உறவும் சுகித்து மகிழ்ந்திட
நித்தமும் வீட்டில் மகிழ்ச்சி பொங்கிடத்
தைமகள் வந்தாள்

தைபிறக்க வழி பிறக்கும்
வழி பிறக்க ஒளி பிறக்கும்
ஒளி பிறக்க உளம் சிறக்கும்
உளம் சிறக்க உயர்வடைவோம்

29.06.2004 சன்றைஸ் வானொலி

# தைத்திங்கள் பிறக்கட்டும் வெள்ளைப்புறாப் பறக்கட்டும்

தை பிறக்க வழி பிறக்கும் என்றார் எம்மவர்
தை பிறந்து வழி பிறக்கக் காலம் வந்ததே

இல்லை என்ற சொல்லை எங்கள் மண்ணில் நீக்கவே
நல்ல சேதி கொண்டு செல்லும் வெள்ளைப் புறாவே

ஈழம் நோக்கி உந்தன் சிறகை மெல்ல விரித்திடு
பாழும் இந்தப் போரை நீக்கி வாழ வைத்திடு

நாளும் வானில் கூவும் போர்வி மானம் நீங்கட்டும்
சீறும் சர்ப்பம் போல் எழும்பும் செல்கள் நிற்கட்டும்

வட்ட மிட்டுக் குண்டு போடும் பொம்மர் நீங்கட்டும்
வான ளாவச் சுற்றிச் சுழலும் ஹெலிகள் நீங்கட்டும்

மூன்று பத்து ஆண்டுகள் நாம் பட்டது போதும்
முத்து முத்தாய் உயிரிழந்தோர் எத்தனை எம்மில்

சொத்தி ழந்து சுகமிழந்து உயிரிழக்கினும்
முத்தனைய சுதந்திரத்தை இழக்க முடியலை

கடலை நோக்கி மீன்பிடிக்கச் செல்லும்நாள் வரும்
காலம் எல்லாம் மகிழ்ச்சியாக வாழும் நாள் வரும்

முற்றும் நெல் மணிக்கதிர்கள் அறுவடை செய்து
விற்று நாமும் சந்தையில் பண்டம் வாங்குவோம்

எங்கள் நாடு எங்கள்பூமி என்ற சிந்தையில்
இங்கும் நாங்கள் தமிழரென்று எழுச்சி கொள்ளுவோம்
ஈழம் எங்கும் அமைதிகண்டு இனிமை காணவே
நாளும் பொழுதும் ஈசன் பாதம் தொழுது நிற்போம்

# தமிழும் சைவமும்

பொங்கல் பானையாய் உதரம் தாங்கிடும்
மங்கள விநாயக உன்னடி சரணம்
தந்தைபோல் என்றும் அறிவுரை தந்திடும் -தலைவா
உந்தன் தலைமையில் என்கவி சிறக்கும்
கவிக்கடல் வேந்தன் வித்துவான் வேலன் அவர்க்கும் வணக்கம்

மங்களமான இப்பொங்கல் விழாவினை
இங்கெம் அரங்கில் கண்டிடவந்த
அன்புடை மக்காள் அருமைக்குழந்தைகாள்
அரங்கில் கவிகளை அளித்திட வந்த
அருமைக்கவிகாள் அளித்தேன் வணக்கம்

சின்னக் கதைதனைச் சொல்லிய தன்பின்
என்கவி தொடர்வேன் ஏற்றிடுவீரே

வேல்சின் ஓர்கரை விளங்கிடும் வைத்தியர்
நாள்கோள் பார்த்து நடந்த அத் தமிழ் மகன்
இருபது ஆண்டுகள் இடையறா தொழில்வளம்
வருமதி பல பல வட்டங்கள் தேறும்
பெற்றனர் பிள்ளைகள் ஆணொடு பெண்ணாய்
முற்றென மறந்தனர் தமிழொடு சைவம்

அண்மையில் ஓர் நாள் அழகிய முருகனின் (லண்டனில்)
ஆலயம் வந்தனர் அருமை மகனோடு
தோழினை விஞ்சிய தோழனாய் மைந்தன்
தோடொடு காதாய் திகழ்ந்தனன் அங்கே
ஆலயம் வந்ததும் ஆண்டவன் தெரிந்தான்
வேழ முகத்தவன் முன்னின்று எழுந்தார்
இரு செவிபற்றி இருந்து எழும்பினர்
முத்தரம் நெற்றியில் முறையாய் குட்டினார்
தந்தையின் அருகே தூணொடு மைந்தன்
வந்தனன் அருகே தந்தையே நோக்கினன்

பிள்ளையாரைப் பார்த்தொரு கேள்வி
Dad who is he?
What happened to his face?
தந்தையின் பதிலது தடங்கியே வந்தது

உமையவள் குளிக்கையில் ஈசனும் வந்தனன்
தடுத்த தனயனின் தலையைக் கொய்தனன்
தேடியே வந்தொரு தலையைப் பொருத்தினன்
விந்தைத் தலையொடு விநாயகன் வந்தனன் - கதை
சொன்னவன் தந்தை சிரித்தனன் மைந்தன்
யானைத் தலை தாங்கும் தெய்வம் - மைந்தன்
சிரித்தனன் மீண்டும் சிந்தை கலங்கியே
சரவணப் பொய்கையில் உதித்த முருகனை
அருகே சென்று ஆள நோக்கினன்
மூவிரு தலைகள் ஆறிரு கரங்கள்
எழும்பிய வினாவொடு தந்தையை நெருங்கினான்
மீண்டும் தந்தையர் மிகைகதை கூறினார்

நெற்றிக் கண்கள் உதிர்த்த பொறிகளை
நிறையவே சரவணப் பொய்கையும் தாங்கி
மறுநொடி மழலைகள் அறுவர் தோன்றலும்
மகிழ்வோடு உமையவள் தூக்கி அணைத்ததும்
ஒரு உடல் ஆறுதலை ஆறிரு கரங்களை
உதித்த முருகன் அருங்கதை கூறினார்
மைந்தனின் முகத்தினில் மிளிர்ந்தது வெகுசினம்
தந்தையை ஏளனம் கலந்து நோக்கினன்
மிலேனியம் ஆண்டினை நெருங்கிடும் வேளையில்
மிகைபடும் கதைகளை நோக்கினன் மைந்தன்
தந்தையை நினைத்து மைந்தனும் வருந்திட
மைந்தனை எண்ணித் தந்தையும் வருந்திட
இருவரை எண்ணி நானும் வருநதினேன்
இங்கும் இதுபோல் தந்தைகள் பிள்ளைகள்
உண்டு உண்டெனச் சத்தியம் செய்வேன்
எங்கள் மழலைகள் எங்களின் பின்னே

தாங்களாய் ஆலயம் சென்று வணங்குமா
எங்கோ நெருடுது இதயம் கசியுது
எங்கோ பிழைக்குது என்பதை அறிவீர்
நினைக்க உள்மனம் நெகிழ்ந்திடும் நிலைமைகள்
நிறைய உண்டு நேரமோ குறையுது
அன்னையும் தந்தையும் அவரவர் குறைகளை
பிஞ்சுகள் முன்னே பெருங்குரலெடுத்துப்
பேசிக் கொள்கையால் கூசிடும் குழந்தைகள்
நினைக்க நெஞ்சு கனமாய் அழுகுது
தம்-பிள்ளைகள் பார்க்க பெற்றோரை அழைக்க -அவர்
உள்ளம் நோகிட ஆக்கினை செய்யும்
பிள்ளையை நினைக்க நெஞ்சம் அழுகுது
ஆலயம் தன்னில் ஓதிடும் குருமார்
பக்தர்கள் நெஞ்சில் பக்திக் கருத்துகள்
தந்திடல் இன்றித் தம்வழி செல்வதை
எண்ணிட இதயம் இறுகிப் போனது
இருக்கும் வரையில் இழைத்திடும் கொடுமைகள் - அவர்
இறந்தபின் கலர்ப்படம் போட்டு அடிக்கின்ற
மக்களை நினைக்க மனமும் அழுகுது
ஈழமக்களை அழித்திடும் அரசின்
அடாவடித் தனத்தை நிறுத்திட வைக்க
ஊர்வலம் ஒன்றை நடாத்திட வந்தால்
ஒதுங்கிடும் தமிழரை எண்ண மறுக்குது
பேச்சுப் போட்டியில் முதல் பரிசினைப்பெற்று
மூச்சு முட்டக் கரவொலி பெற்ற
பையனின் பேச்சுத் தாளினை அருகில்
பையவேசென்று பார்த்திடும் வேளை
பைந்தமிழ் மொழியினை ஆங்கில மொழியில்
எழுதிப் படித்து பரிசில் பெற்றதை
எண்ணி நெஞ்சு ஓலமாய் அழுகுது
கருத்தறியாத திருக்குறள் தன்னை
விருப்பொடு மேடையில் விளாசித்ததள்ளி
செருகுடன் தங்கப் பதக்கமும் பெற்ற
பிள்ளையை எண்ண நெஞ்சம் அழுகுது

எங்கும் கூறியும் இங்குள அரங்கில்
தங்கிய மக்களின் தொகையினை எண்ண

எங்கள் இதயம் என்னமாய் எழுகுது
எங்கள் சிறார்கள் எழூலோடு பழகிநிற்கும்

நடனமதை சங்கீதம் மிருதங்கம் வயலினை
ஆங்கிலத்தில் எழுத ஒப்பிவிக்கும் நிலமைதனை

எண்ணுகையல் நெஞ்சம் ஓலமாய் அழுவதென்ன
எம்மவர் பிரச்சனை ஓர்கரை வைத்து-எம்

மண்ணிலே வாழும் மாந்தரை எண்ணுவோம்
வன்னி வாகரை வாழும் எம்மவர்

கண்ணீர் நீர்தனை தாங்கிடக் கண்டோம்
மழையும் குளிரும் நுளம்பும் காற்றும்
இணைத்திட வைத்தது எம்மவர் உடலை

தொற்று நோய் ஓர்புறம் மற்ற நோய் மறுபுறம்
தொடர்ந்த துன்பமாய் வருந்திடும் வேளை

இங்குள எம்மவர் உதவியைக் கேட்டால்
பங்கமாய்ப் பதூல்கள் பகிர்வோர் சொற்களை

இங்குநான் நினைத்தால் அழுகைதான் வருகுதே.
கெஞ்சமாய் எம்மவரை நெஞ்சிலே கொண்டிடின்
விஞ்சிடும் அவர் பசி தீர்த்திட லாமே.

பொறுமையாய் என்கவி கேட்ட உங்கள்
அனைவருக்கும் எந்தன் அன்பு வந்தனம்

# சித்திரை பிறந்தாள்

சித்திரை பிறந்தாள் சிந்தை மகிழ்ந்தோம்
இத்தரை மீதிலும் எம் நிலம் மீதிலும்

எத்துணை இடரும் இன்றியே வாழ்ந்திடச்
சித்திரை வந்தாள்  சிந்தை மகிழ்ந்தோம்

ஆண்டொரு சித்திரை அழகாய் மலர்ந்திடும்
பூண்டஎம் துயர்கள் பொக்கிடும் என்று

மீண்டும் மீண்டும் ஆழமாய் நம்பினோம்
ஆண்ட பரம்பரை மீண்டும் ஆண்டிடும்

மீண்டும் இதையே மிகைபடக் கூறினோம்
மாண்டவர் தொகையோ மலையென உயர்ந்தது

மீண்டும் நம்புவோம் மனத்தின் கவலைகள்
பூண்டொடு அழியும் புலர்ந்த சித்திரை

ஆக்கினை நீக்கி அனைத்தையும் தந்து
போக்கிடும் துன்பம் பெரிதென நம்புவோம்

# தமிழ் மொழி வளர

தமிழ் மொழி வளர தமிழில் பேசுவோம்
அமிழ்தினை ஒத்த தலைப்பினில் இன்று

கவிதனைத் தந்திட அரங்கினில் வந்தேன்
செவிதனில் ஏற்றுச் சிந்தையில் ஏற்பீர

அமிழ்தினை ஒத்த எழில்தமிழ் இருக்க
எளிதினில் ஆங்கிலம் இயம்பிட விரும்பும்

என்னரும் மக்காள் இனியநற் குழந்தைகாள்
கன்னல் தமிழ்மொழி பேசிடக் கசப்பதேன்?

வளம்பல கொண்ட வண்டமிழ் மொழியிது
உளந்தனில் உவகையை ஊற்றிடும் மொழியிது

களம்பல கண்ட கன்னித் தமிழிது
இளந் தலைமுறையினர் ஏற்றிடும் மொழியிது

எதுகையும் மோனையும் எழிலொடு குலவும்
பொதிகை மலையில் பிறந்த தமிழிது

மணிமேகலையொடு குண்டலகேசி
அணிகலன் செய்யும் அழியா மொழியிது

மறத்தமிழ் வீரம் மகிமைகள் கூறிடும்
புறநானூறு படைத்த மொழியிது

சிலம்பின் கையொடு சீறிய பத்தினி
சிலப்பதிகாரம் தந்த தமிழிது.

கடுகினைத் துளைத்து ஏழ் கடலினைப்புகுத்தி
நெடுகிலும் அறிவுரை நிறையவே தந்து

வான்புகழ் கொண்ட வள்ளுவன் தந்த
தேன்தமிழ் திருக்குறள் தோன்றிய மொழியிது

இத்தனை சிறப்புகள் தாங்கிய எம்மொழி
சத்துமிகுஓசை  செந்தமிழ் மொழியினை

எத்துணை தூரம் எம்மவர் வெறுப்பது
எத்தனை தூரம் இழிவென அறிவீர

பைந்தமிழ் பேசுதல் பாசன் இல்லையென
ஆங்கிலம் பேசிடும் அன்புடைத்தமிழீர்

எத்தனை அழகுற ஆங்கிலம் பேசினும்
உந்தனை  வெள்ளையர் என்றிடலாமோ?

# தமிழ் கற்பிப்பீர்

வாரமொரு தடவை வில்லங்கமாய் அழைத்து வந்து
ஆரத் தமிழ் படியென்று ஓலமிடும் பெற்றோரே!
மம்மி டடியென் றழைக்க மனங்குளிரும் மாதா பிதாக்களே
இரண்டுமணி நேரம் நாம் எடுத்தியம்பும் தமிழதனை
மறந்திடுவார் உம்மக்கள் மறுமுறை வருகையிலே

பாவம் சிறுசுகள் பரிதாபம் அவர்நிலையும்
பியானோ, கிற்றார், சுவிமிங், கராட்டி,
படிப்பதெது விடுவதெது தெரியாமல் பரிதவிக்கும்
பாலர்களின் மீதோ பலமான நெருக்குதல்கள்

அன்னையரே தந்தையரே ஓர் வார்த்தை கேட்டிடுவீர்

வீட்டினிலே உம்மக்கள் தமிழ் கதைக்க - அதை
நாட்டமுடன் செவிமடுத்து ஊக்குவிப்பீர் - கேட்கும்
பாட்டினிலும் பார்க்கும் திரைப்படங்களிலும் - கூட்டும்

விழாக்களிலும், தமிழ் மணக்க வழிசெய்வீர்
ஆலயங்கள் தன்னில் அருஞ்சிறாரை அழைத்துவந்து
ஆன்மீகக் கருத்துக்களை உளமாரப் பருகவைப்பீர்
தாயகத்துச் சிந்தனையை வேர்விட்ட உறவுகளை
ஆழஅவர் நெஞ்சிருத்தி அருங்கதைகள் கூறிடுவீர்
பாலப்பருவத்திலே பிஞ்சுகளின் உள்ளத்திலே
ஆழஅவை பதிந்துவிட்டால் அவர்வாழ்வும் சிறந்திடுமே

நாட்டமுடன் நம்சிறார்கள் நல்வாழ்வு வாழ்ந்திடுவார்
தீட்டுவது என்கடமை உயிருட்டுவது உம்பொறுப்பு

03.07.2002 சன்ரைஸ்

# கல் நெஞ்சம் கரையட்டும்

சித்திரை பிறந்தது சிந்தை குளிர்ந்தது
தமிழர் உள்ளமெலாம் தனிநம்பிக்கை பிறந்தது

எட்டு வரி கேட்ட அறிவிப்பாளர் இதயம்
சற்று கரையட்டும் சற்று நான் கவிநீட்ட

பெற்றோரை இழந்திட்ட பாலர்களின் நல்வாழ்வைச்
சற்றேனும் எண்ணாதோர் நெஞ்சங்கள் கரையட்டும்

தாய்நாடு விட்டுத் தொலைதூரம் வாழ்கின்ற
தமிழர்தம் நெஞ்சங்கள் தாய்நாட்டுக்காய்க் கரையட்டும்

பெற்றோரை மறந்திங்கு பெருவாழ்க்கை வாழ்கின்ற
உற்றான பிள்ளைகளின் இதயங்கள் கரையட்டும்

பெற்றோரை அழைத்திங்கு பிள்ளை பராமரிக்கும்-சிறு
பிள்ளைத் தனங்களின் சிற்றிதயம் கரையட்டும்

சங்கங்கள் வைத்திங்கு சமர்செய்து வாழ்கின்ற-சங்க
அங்கத்தோர் இதயங்கள் சற்றேனும் கரையட்டும்

ஆலயங்கள் வைத்திங்கு அரசாட்சி செய்கின்ற
ஆலயநிர் வாகத்தின் இதயங்கள் இளகட்டும்

பிறக்கும் புத்தாண்டு போக்கும் துன்பமென்று
மனத்தில் எண்ணாதோர் இதயங்கள் இளகட்டும்

மேற்சொன்ன நெஞ்சங்கள் கரையட்டும் கரையட்டும்
நான்சொல்லும் நெஞ்சொன்று கரையாது நிற்கட்டும்

ஈழத்தமிழர்களை ஈனப்பிறப்பாக்கி
வாழும் தமிழர்களின் வாழ்வை அழித்தங்கு

சொன்ன தமிழீழக் கொள்கை பிரளாத
தம்பி உன் நெஞ்சு என்றும் கரையாதிருக்கட்டும்

பகைவரை எண்ணிப் பரிதாபம் நீ கொண்டால்
பழிவாங்கும் உள்ளங்கள் குழிதோண்டும் வேளையிது

ஆகவே தம்பி உன் நெஞ்சென்றும் தமிழீழக்
கொள்கைக்காய்க் கரையா திருக்கட்டும்

# தீபாவளி

தாயகத்தின் விடுதலைக்காய் தம்முயிரை உவந்தளித்த
தீரமிகு தியாகிகளே! தாய்நாட்டின் வித்துகளே!
தலை தாழ்த்தி அஞ்சலித்தேன் -
தமிழ் மொழிக்காய் நீர் செய்த தியாகத்தின் பயன் விரைவில்
அமிழ்தான தமிழ்ஈழ மண்ணாகப் பெற்றிடுவோம்

அண்மையின் முடிந்த தீபாவளியினை
என்மனங்கொண்டு இக்கவி தந்தேன்

உலகத் தமிழினம் உளம் மகிழ்வெய்தி
கலகலப்பாகக் களித்திடும் திருநாள்

புத்தாடை புனைந்திங்கு புத்தூக்கம் கொண்டு
மத்தாப்பு வெடியோசை மகிழ்வோடு செய்து

பத்தாக தீபங்கள் பலவாறு ஏற்றி
பலவாறு கொண்டாடும் நாளிந்த நாளே

ஆடவர் சிறுவர் அனைவரும் மகிழ்ந்து
அட்டைச்சுருளும் குருவியாகாசமும்

செவிதனைப் பிளக்கும் வெடிபல கொழுத்தி
சர்ரெனப் பாயும் வாணங்கள் ஏற்றி

புதுஉடை அணிந்து புதுமனம் கொண்டு
பரவசத் துடனே ஆலயம் சென்று
பரமனைப் பணிந்து துதித்திடும் நாளே
மக்களை வதைத்து கொடுமைகள் செய்து
நரவதை புரிந்த நரகாசுரனைக்
கிருஷ்ண பகவான் கொன்றதிந் நாளே

சிறப்புச் சலுகைள் சிறப்புக் கழிவுகள்
ஒன்றை வாங்கினால் ஒன்றினாம் என்னும்
வர்த்தக் கடைகள் வலிந்து இழுக்க
விதம் விதமான விளம்பரங் களினால்
புதுத் திரைப்படங்கள் பக்கம் இழுக்க
உலகத் தமிழினம் உவகையின் உச்சியில்
மகிழ்வைக் காட்டிடும் மாண்புறு திருநாள்

விதம்விதம் உணவுகள் விதம்விதம் இனிப்புகள்
விதம்விதம் வறுவல் வகையாய் ஆக்கி

உற்றார் அழைத்து உணவுகள் பகிர்ந்து
சுற்றம் மகிழ்ந்திடச் செய்வதிந் நாளே

வாரமோர் முன்பே தாய்மனை சென்று
சேர்வன வேண்டிச் சிறப்புகள் செய்து

ஆர்வமாய் உறவுகள் அதையிதைப் பேசி
அழைந்து குலாவிடும் அருமைத் திருநாள்

உலகத் தமிழினம் உவந்து மகிழ்ந்து
அளவளாவி மகிழ்ந்திடும் வேளை

கண்ணீர்த்துளி வடி தீவாம் இலங்கையில்
கண்ணீர் தனையே வாழ்வாய்க் கொண்டு

வாழும் எம்மவர் வாடும் நிலையினை
நாளும் எண்ணிட நெஞ்சு வலிக்கிறதே
ஈழத் தமிழினம் பட்டிடும் இன்னல்
தாளமுடியாக் கண்ணீர்க் காவியம்

வெள்ளப்பெருக்கிடை ஒழுகிடும் வீட்டிடை
மரத்தின் நிழலிடை மண்டபக் கரையிடை

பாம்புக்கடியிடை பாதைக்கரையிடை
வெள்ளம் நிறைந்த பதுக்கு குழியிடை

நாளொரு வீடும் நேரமோர் கூரையும்
குண்டுகள் விழவிழக் குடிபெயர்ந்தோடும்

வகையறியாத வன்னிவாழ் மக்கள்
தீபாவளிதனை நினைக்க முடியுமா?

சொந்த மண்ணில் நொந்த எங்கள் பந்தங்களை
சிந்தையிலே சிலநிமிடம் சிரத்தையோடு இருத்திடுங்கள்

வந்தாரை வாழவைத்து வருவோரைக் காத்திருந்த
சொந்தங்கள் இன்று நொந்தங்கு வாழுதையா

பிறந்தவூர் நாடுவிட்டுப் புகுந்த ஓர் வாழ்நிலத்தில்
பறந்து தறிகொட்டுப் பாவியராய்த் திரிகின்றார்

சொந்த மண்ணைப் பிரித்திட்ட சோகம் உளம்வருத்த
சொந்தமக்கள் துணையின்றி வந்தமக்கள் ஆதரிக்க

சென்றஇடம் தங்குமிடம் ஆகிவிட்டசோகமதால்
நின்றஇடம் நாளையும் நிலைபெறுமோ என்றதுயர்

செஞ்சமுத்தும் வேதனையால் நித்தநித்தம் அல்லலுறும்
நொந்து பெற்ற தாயினையும் நோகாது எமைக்காத்த

தந்தையையும் ஒருக்கால் தயவாக நினையுங்கள்
நோய்நொடியால் வாடுகையில் நொந்தநெஞ்சு விம்முகையில்

சேய்அருகில் இல்லையென்று சிந்தைதடு மாறுகின்ற
தாய்நிலத்து உறவுகளைத் தயவாக எண்ணுங்கள்

கொள்ளிவைக்கப் பெற்றமகன் கப்பலேறிச் சென்றுவிட
அள்ளியூட்ட ஆருமின்றி அவதிபல நோக்கிநிற்கும்

உங்களரும் பெற்றோரை ஒருக்கால் எண்ணுங்கள்
கொஞ்சுதற்கோர் அன்னையின்றிக் குலவுதற்கோர் தந்தையின்றி

நெஞ்சத்து ஏக்கங்கள் நிறைந்திட்ட பாலர்கள்
நெஞ்சம் நிமிர்ந்து நல்வாழ்வு வாழ்வதற்குக்
கொஞ்சம் கைகொடுங்கள் கடவுளுமைக் காத்திடுவார்

போர்மேகம் கலைகின்ற போர்ச்சூழல் அங்கில்லை
கார்மேகம் சுரக்கின்ற கார்காலம் கனிகின்றது

மரவோரம் கடையோரம் மதிலோரம் தெருவோரம்
இரவென்றும் பகலென்றும் இவர்வாழ்வு அமைகின்ற

துயர்நீக்கத் தளராது துணிவோடு கைகொடுங்கள்
அயராத உம்சேவை அவர்வாழத்துணைசெய்யும்

கர்ப்பிணித் தாய்மாரை கண்ணிழந்த கபோதியரை
காலிழந்து கையிழந்து கவலையுறும் எம்மவரை

பள்ளிக்குச் செல்லாது பிச்சைக்காய் அலைகின்ற
பிள்ளைகளை அணைத்தெடுக்கும் பெருமனது கொள்ளுங்கள்

கூரையற்ற மக்களுக்கு கூரைகளைத் தான்வழங்கி
ஆருமற்ற சிறார்களுக்கு ஆகாரம் தான்வழங்கி

நாதியற்ற முதியோர்க்கு நல்லுதவி தான்புரிந்து
ஆதாரமாக நின்று அனைத்துதவி தான்வழங்கி

எம்மவர்க்கு எம்கடனை இனிதாகச்செய்யுங்கள்
சும்மா கதைபேசிச் செய்பவரைத் தாக்காதீர்

சொல்லில் அடங்காத சோதணைகள் எம்மவரை
எல்லையில்லா வேதனையில் ஆழ்த்திவிடும் வேளையிது

தாய்நிலத்து உறவுகளைத் தூரநின்று நோக்குகின்ற
சேய்உறவே சற்றுநீர் சிந்திக்கும் நேரமிது

தொப்புள் கொடியுறவாய்த் தமிழகமே கிளர்ந்தெழுந்து
ஆரப்பாட்டம் பல செய்து அகிலத்திற் கெம்நிலையை

ரயில்மறியல் சிறைநிரப்பு தமைவருத்து உண்ணாவிரதம்
திரையுலகும் திரண்டு வந்து தம் உணர்வைக் காட்டிநிற்க

மாணவரும், அமைப்புகளும் மிக எழுச்சி கொண்டு நிற்க
தமிழகத்தின் ஆதரவு கடலெனவே பெருகிடட்டும்

வாழ்விழந்த எம்தமிழர் நல்வாழ்வு பெற்றிடவே
காலம் கனிந்திடட்டும் கவலைகள் தீர்ந்திடட்டும்

எம் நாட்டைக் குதறிநிற்கும் நரகாசுரன் படையணிகள்
எம்நாட்டு வேங்கைகள் சங்காரம் செய்திடட்டும்

காலம் கடக்கமுன் எம்கடமை செய்திடுவோம்
காலம்எமைத் தூற்றாது கருத்தோடு வழிசெய்வோம்

நாமும் எம்தாய்நாட்டில் நலமோடு வாழ்ந்தங்கு
நல்லவோர் தீபாவளி நன்றாய்க் கொண்டாடிடுவோம்

அதுவரை காத்திருப்போம்! விழித்திருப்போம்
கதைநிறுத்திக் கடன் செய்வோம்!

# தமிழ் அகதி

மஞ்சுதொடு மலைகளிடை கொஞ்சுதமிழ் சலசலக்க
விஞ்சுகின்ற அருவிகளும் விரைந்தோடும் சிற்றாறும்
அஞ்சிநடை பயில்கின்ற அன்னமொடு வாத்துகளும்
நெஞ்சுநின்று ஆர்ப்பரிக்கும் நாடு எங்கள் நாடு

சிங்களமும் செந்தமிழும் சொந்தமுடன் குலவிநிற்க
சுதந்திரமாய் செந்தமிழும் வடகிழக்கில் அரசோச்ச
எஞ்சிய எம்நாட்டினிலே சிங்களமும் அரசோச்ச
மங்களமாய் ஈரினமும் மகிழ்வோடு வாழ்ந்ததுவே

தமிழரவர் ராமநாதன் தேரினிலே அமர்ந்திருக்க
சிங்களத்துச் சோதரரும் சேர்ந்திழுத்த சரித்திரம்போய்
பண்டார நாயக்கர் பொழிந்துவிட்ட இனவெறியில்
சண்டாளன் ஜேஆரும் சதிவழியைத் தொடர்ந்திட்டான்

பல்கலைக் கழக பிரவேசமதில் தரப்படுத்தி
பைந்தமிழன் என்றதனால் பறித்ததுவே எம்நுழைவை
மெல்லெனவே சிங்களத்தான் எம்மிடையே குடியேற
தொல்லைகள்தான் தமிழனுக்குத் தன்னாட்டில் தொடர்ந்ததுவே

அகிம்சைவழிப்போராட்டம் அடுத்தடுத்து எம்தலைவர்
அமைதியுடன் நடத்துகையில் அழிந்தனரே குண்டர்களால்
சத்தியாக் கிரகங்கள் சிறையினிலே விரதங்கள்
எத்தனையோ எம்வாழ்வின் ஏமாற்றப் படியணிகள்

கலவரங்கள் தொடர்கையிலே காடையராம் சிங்களத்தார்
கடையுடைப்பும் கற்பழிப்பும் கொலைவெறியும் கொண்டதனால்
தென்மேற்கில் துடிதுடித்து தாவிவந்தோர் வடகிழக்கில்
தம்நாடாய் துணிவுபெற்று தம்நிலைமை உணர்ந்தனரே

வள்ளத்தில் பாய்ந்தேறி வழிதவறிப் போனவர்கள்
கள்ளத்தோணியெனக் கரையேறி விட்டவர்கள்
மெல்லக் கொழும்பில்நின்று விமானத்தில் வந்தவர்கள்
எல்லோரும் எடுத்தபெயர் அகதி என்று அறிவீரோ

3.3.1988 தமிழ் அகதி மலரில் பிரசுரமான கவிதை

# தீபத் திருநாள் - தீபாவளி

பொழுது விடிந்தால் பட்டாசு வெடிக்கும்
அழுத உள்ளங்கள் அகமகிழ்வெய்தும்

இந்துக்கள்  இல்லம் இணையிலா இன்பம்
பந்துக்கள் கூடி பரவசப் படுவார்

ஆடவர் பெண்டிர் அவர்தம் இளையோர்
புத்துடை அணிந்து புதுப்பொலிவெய்தி

உற்றார் உறவினர் அனைவரும் களிக்க
பெற்றார்முன்னிலை பெருமகிழ்வெய்துவர்

புதுமணமக்கள் பெருமகிழ்வெய்தி
விதம்விதமாகக் கற்பனை செய்வர்

நரகாசுரன் மடிந்திட்ட நன்னாளாம் இன்று
நம்மக்களெல்லாம்  நனிமகிழ்வெய்துவர்

உலகெலாம் எம்மவர் உவப்புடன் களிக்க
விழிவடி தீவினில் வெதும்பினர் எம்மோர்

நரகாசுரன் பெற்ற நம்நாட்டுச் சிறுக்கி
நரபலி எடுத்து  நர்த்தனமாடுகிறாள்

தம்பி பாரிஸ் தங்கை லண்டன் - இவர்தனை
தந்த பெற்றோர் தடுப்புக் காவலில்

ஈன்று புறந்தந்து எம் தாயக்கும் தந்தைக்கும்
நன்றிக் கடன் செலுத்த நாதியில்லா வாழ்வு

வந்தாரை வரவேற்று வருவோர்க்குக் காத்திருந்த
சொந்த இனமங்கு நொந்தழிந்து போகுதையா
எந்த நேரமும் சாவங்கு முத்தமிடும்
நொந்தவர் வரலாறு  நெடிதங்கு நீளுதையா

## பள்ளி மாணவி அரங்கில்
## படிக்கவோர் கவிதை

மகளிர்தின விழாவுக்கு
மகிமையுடன் வருகைதந்த
மாண்புமிகு தாய்க்குலத்தீர்!

என்னோடு படிக்கின்ற
என்னினிய சோதரர்காள்,

விழாவிங்கு சிறந்துநிற்க
வலக்கரமாய் நின்றோரே!

பாலகி நான் பக்குவமாய்
நாலுகவி பேசவந்தேன்.

குறைநீக்கி நிறைகண்டு
கவிவளத்தைப் போற்றிடுவீர்!

பெண் இனத்தின் விடுதலைக்காய்
பெருமையுடன் பேச வந்தேன்.

தாய்மைக்கு இணையில்லா
தரம் மிகுந்த பலகவிகள்
தத்துவமாய் நாம்கேட்டோம்.

பெண்களுக்கோர் நாளொன்று
பெருமைகூற நாம் வந்தோம்.

நாற்குணமும் நிறைந்தவள்தான்
நம்பெண்களெனக் கொண்டோம்.

அச்சமொடு நல்மடமும்
நாணமொடு பயிர்ப்பும்

இட்டமுடன் கொண்டவள்தாள்
எம்பெண்களெனக் கொண்டோம்.

தமிழர்நம் கதைகளிலே
தமிழச்சி பெருமை கண்டோம்.

முறமெடுத்துப் புலியடித்த
மாண்பினையும் நாம்கண்டோம்.

மகனிறக்க முலையறுத்த
வீரமதை அங்கு கண்டோம்.

தாயகமாம் ஈழமதில்
தமிழச்சி வரலாற்றை
தரணியெங்கும் தானறியும்.

அகப்பை யதையேந்தி
அன்னமதை எமக்களித்த
அக்காமார் அங்கின்று
ஆட்டிலறி ஓட்டுகின்ற
அரும்விந்தைதனைக் கண்டோம்.

தாயகத்தில் சாதனைகள்
படைத்துநிற்கும் வேங்கைகளில்
பாதியது எம்போன்ற
மங்கையர்தான் என்பதையும்

தாலியதும் சங்கிலியும்
அலங்கரிக்கும் தளிர்க்கழுத்து
வாழ்வதனை உரிமைக்காய்ப்
போக்குகின்ற குப்பிதனைத்
தானணிந்த மங்கையரை
தமிழீழம் கண்டதுவே.

என் சின்னக்கவி கேட்ட
உங்கள் அனைவருக்கும்
சிரந்தாழ்த்தி வணக்கங்கள்
தந்துநின்றேன் நானிங்கே.

நன்றி வணக்கம்

# கலைஞரே வாழி! வாழி!

தமிழகம் ஆளும்எங்கள் முதல்வரே கலைஞரே உம்மை
அமிழ்தினி தமிழால் வாழ்த்தி அருங்கவி தொடுக்க வந்தேன்

தமிழினில் ஏற்றம் கண்டீர் ஐமுறை தலைமை கொண்டீர்
தமிழகம் சிறக்க மீண்டும் தலைமையை ஏற்று நின்றீர்

திரையுல காட்சிதன்னில் தனித்துவம் மிக்கக் கொண்டீர்
தளர்நடை கொண்டபோதும் தமிழகம் வென்று நின்றீர்

ஆட்சியில் நீட்சி பெற்றீர் அரும்மகன் துணையைக் கொண்டீர்!
மாட்சிமை மிகுந்த ஆட்சி மிளிரும் என்காலம் என்றீர்

கலைஞரே! தமிழின் ஊற்றே! களம்பல கண்ட வேந்தே!
நிலைகுலைந் தேங்கும்ஈழத் தமிழரின் துயரைக் கேளீர்!

துளிவடி தீவுதன்னில் தமிழினம் சாகும்வேளை
விழிதனிலே ஈரமின்றி வெறுமனே பார்த்து நின்றீர்!

முப்பது மைலுக்கப்பால் சாவையே வாழ்வாய்க் கொண்டு
நிர்க்கதி யாகிநிற்கும் நம்மவர் நிலையை நோக்கீர்!

கலைஞரின் ஆட்சிதன்னில் கலங்குவார் ஈழமக்கள் - எனும்
நிலைதனைப் போக்கிநாமும் நிமிர்தலை கொள்ளச் செய்வீர்

பழநெடுமாறன் வைகோ திருமாவளவன் மட்டும் - ஈழத்
தமிழரோ உறவோ ஈகைதமதெனக் கொண்டா ரன்றோ

கலைஞரின் பார்வைதன்னில் கருணையே இல்லையென்ற
நிலைதனை மாற்றிநீரும் நின்கரம் தந்துநிற்பீர்!

சேய்தனுக்கின்னல் என்றால் சிந்தையே நோகாத் தாயை
சேயுமே வெறுத்து நிற்கும் சிந்தையில் கொள்வீர் ஐயா!

நாட்டினில் நடக்கும்போரால் நம்மவர் அழிதல் கண்டு
மூட்டியதீயென் உள்ளம் முழுதுமே தகித்ததாலே

பாட்டினில் கருத்தைவைத்து பணிவுடன் தந்துநின்றேன்
தீட்டினேன் என்கருத்தை தலைவனே சிந்தைகொள்வீர்

வாழிய உந்தன் செங்கோல்! வளர்ந்திடும் தமிழின் மேன்மை!
(ஆட்சிப்பொறுப்பு ஏற்றபோது)

# கலைஞரே முதல்வரே வாழி!

அகிலமே வியந்து நிற்க ஆட்சியைக் கைக்குள் கொண்டிர்
முகிலிடை நின்ற வெய்யோன் முழுவொளி தந்தாற்போல
விழுமியந்தாற்கி நிற்கும் வீரராம் திராவிடர்க்கு
முழுவதிகாரம் கொண்ட மன்னனாய்க் காட்சிதந்தீர்
கரமிரண் டும்மைஏந்த களிப்பொடு ஆட்சிக்கட்டில்
உரிமையாய்ப் பற்றி உந்தன் ஆளுமை காட்டிநின்றீர்
திரையுலகாட்சி தன்னில் தனித்துவம் காட்டிநின்றீர்
கரையிலா உணர்ச்சிகொண்டு கதைகளாய்வடித்து நின்றீர்
எழுதுகோல் உந்தன்கையில் எழிலுடன் குலாவும் வேளை
பழுதிலாக் காவியங்கள் பற்பல தந்துநின்றீர்!
உரிமைகள் மறுத்தபோது உணர்வுகள் வெடித்தெழும்ப
அருமையாய்க் காவியங்கள் அள்ளியே தந்து நின்றீர்!
உரிமைகள் இழந்துஈழ நாட்டினர் துயர்கொள்வேளை
வெறுமனே பார்த்துநின்று வேற்றுதாய் மனதைக் கொண்டிர்!
தளர்வுறும் வேளைதன்னில் தலைமையைத் தாங்கிநிற்கும்
கலைஞரே தமிழின் ஊற்றே! கனிதமிழ்ச்சாறே! ஏறே!
தமிழிலே பழுத்து நின்றீர்! அரசியல் பழுக்கக் கற்றீர்!
விழுதென மைந்தன் மூலம் விழுப்பிலா வாரிசு கொண்டீர்!
மீதியும் காலம் தன்னில் மிளிர்வுடன் கருணை கொண்டு
நாதியற் றேங்கும்ஈழ நந்தமிழ் மக்கள்வாழ
ஏதும்நீ செய்து செய்துநிற்பீர்! எம்மையும் வாழ வைப்பீர்!
போதும்நாம் பட்டதுன்பம் பனியென விலக்கி வைப்பீர்!
ஐயனே ஐந்துஆண்டு அரியணைகொண்ட ஏறே!
செய்திட ஆணைஉண்டு! சிறந்தநல் மனதுஉண்டு
தூற்றுவோர் தூற்றி நிற்க துணிமிகு நெஞ்சம்கொண்டு
ஆற்றுவீர் உந்தன்சேவை! ஈழவர் மீட்சிகொள்ள - இதை
ஏற்றுநீர் கடனாய்க்கொண்டு ஈழவர் துயர் துடைப்பின்
போற்றுவார் ஈழமக்கள் புரட்சிநீர் செய்தீரென்பார்

சேங்கோல் சிறப்புற வாழ்த்தும்
பால.ரவீந்திரன்

## தமிழருவி சிவகுமாரன் அவர்களுக்கு 08.09.2008 அன்று கற்பக விநாயகர் ஆலயத்தில் வழங்கிய வாழ்த்துப்பா

அற்புதம் மிகுநிறை ஆனை முகத்தோன்
கற்பக விநாயகன் பொற்பதம் போற்றி

வானிடை உயர்ந்த மலைதனில் நின்று
சோவெனக் கொட்டும் அருவியாய்த் தமிழை

சொற்பதங் கொண்டு செந்தமிழ் மொழியில்
விற்திறன் கொண்ட மகாபார தத்தினை

பற்பல உவமைகள் பற்பல வீச்சுரை
அற்புத மாக எம்மவர் வியந்திட

பாரதம் தன்னைப் பொருளெனக் கொண்டு
சாரமாய்க் கதைகள் சுவைபடத் தந்த

செந்தமிழ் அருவியாம் சிவகுமாரனை
சுந்தரத் தமிழால் வாழ்த்திட வந்தோம்!

அண்ணா!
கொடி யிங்கேறத் தொடங்கிய பேச்சு
இடியென முழங்கிச் சோவெனப் பெய்து

மடையெனத் திறந்த வெள்ளமாய்ப் பாய்ந்து
இடமது இன்றி இதயம் நிரப்பி

வாழ்வியல் காட்டி வனப்பொடு வாழ்ந்திட
தாழ்வுறாத் தத்துவம் தடையறு தந்து

கேள்விகள் கேட்டு கவினுறு பதிலும்
ஆழமாய்த் தந்து அற்புதம் மிகுந்த

இந்து மதத்தின் விந்தைகள் கூறி
சிந்தனை தூண்டும் சொற்சரம் தன்னை

இன்று வரைக்கும் எழிலொடு தந்தாய்
நன்றி உந்தன் நற்பணி சிறக்கும்

வள்ளி தெய்வானை பூப்படை விளக்கமும்
அள்ளியே தந்தாய் அறுபடை வேலனின்

தெய்வத் திருமணம் துலங்கிடத் தந்தாய்
ஐயனே உந்தன் ஆளுமை சிறக்கும்

சோர்வொடு எம்மவர் சுரம்குறை வேளையில்
சீரிய நகைச்சுவை சிறப்பொடு தந்து

சிந்தை நிரப்பிய செந்தமிழ் அருவியே!
தமிழின் சுவையே! அண்ணா சிவகுமாரனே

உந்தனை வாழ்த்திட வார்த்தைகள் இங்கிலை

கற்பகத் விநாயகன் கரையிலாக் கருணை
நிற்கும் துணையாய் நிடுழி வாழ்வாய்!

உந்தன் வாழ்வு வளம்பெற வாழ்த்தி நின்றிடுவோம்

## கீழ்த்திசை இலண்டன் கற்பக விநாயகர் வருடாந்த திருவிழா நிகழ்வில் சொற்பொழிவாற்றிய டாக்டர் திருமதி சரசுவதி இராமநாதன் அவர்களுக்கு 04.09.2006 அன்று வழங்கி கௌரவித்து வாசித்தளித்த வாழ்த்துப்பா

கற்பக விநாயகர் பொற்பதம் போற்றி
கடந்த ஈரைந்து தினங்களாய் இங்கு
அற்புதமாக எம்இந்து மதத்தின்
அரும்பெரும் தெய்வம் அத்துடன் குரவரை
பற்பல கருத்துடன் பக்குவச சுவையுடன்
பண்படு தமிழில் பொருளொடு தந்து
சிற்சில நேரம் செந்தமிழ்ப் பாக்கள்
சிந்தையை உருக்கிடும் ரசனையாய்த் தந்து

எங்கள் உளத்தினில் தமிழொடு சைவம்
ஆழப்பதிக்கும் இலக்கினை வகித்து
வெள்ளம்போல் தமிழினைத் தந்து
வேகவேகமாய்ப் பாடலும் தந்து

சோர்ந்து எம்மவர் தம்முள் கதைத்ததால்
சிறப்புடன் நகைச்சுவை சுவைபடத்தந்து
ஆர்வம் மேலிட அத்தனை கருத்தையும்
அழகுற நடித்து அருமையாய்த் தந்து

கள்ளமில்லாத தன்னுளச்சிரிப்பால்
கவினுற எம்மைத்தன்பால் இணைத்த
பள்ளத்தூர் உறை டாக்டரே
புலவர் இராமநாதனின் பெருந்துணையே

வேதவிநாயகன் முருகனும் சிவனும்
ஞானசம்பந்தன் அப்பரும் - சிவனைப்
பித்தரென்றுரைத்த சுந்தரர் இவரொடு
திருவாசகம் தந்த மணிவாசகரும்

நேற்றுப் பள்ளியில் படித்தது போன்று
நெஞ்சை நிறைக்க நினைக்க வைத்தனை
காற்றைக்கிழிக்கும் காந்தக்குரலினால்
இமைகளே கண்களை வெட்டமறக்கும்
ஆற்றல்மிகுந்த ஆளுமை கொண்டு
அள்ளித்தந்தனை சைவத்தமிழினை - அன்னையே!
போற்றுவோம் உந்தன் பழுதிலாச் சேவை
பல்கிப்பெருகிடப் பெருகிட என்றே

நாராயணன்துணை கோமதி வயிற்றில்
நல்முத்தாய்நீ உதித்தவேளையில்
பேரினைக் காக்கப்பிள்ளை பிறந்ததாய்
தேவகோட்டையே மகிழ்ந்தது அன்று

தமிழொடு இசையும் தெலுங்கும் வடமொழி
அருமையாய் அறிந்த அம்மையே - நீவிர்
பல்கலைக்கழகத் தேர்வுத் துறையிலும்
வினாத்தாள் வகுப்பதில் வல்லவரானீர்

காவியக்கலைமணி சொல்லின் செல்வி
ஆன்மீகத்தின் அமுத சுரபி ஞானத்தமிழின் வாரிதி
முத்தமிழ் பேர் அரசி கம்பராமாயண நவரசத்திலகம்

இட்டமாய்ப்பெற்ற பட்டம் சொல்லவே
இதமாய்ப் பாதி இராவும் சென்றிடும்- அம்மையே
பட்டம்பலபல பெற்றும் கர்வம்
சற்றும் சிறிதிலாப் பண்பினைக் காத்தீர்

பத்து நாட்களாய்ப் பகர்ந்த தமிழும் சைவமும்
நித்தமுமெங்கள் வாழ்வினை நிறைக்கும்- அம்மையே

நித்தமும் நாங்கள் நெறியுடன் துதிக்கும்
மத்தள வயிறன் ஆசிகள் பெற்று
வாழிய வாழிய வாழிய என்று
வாழ்த்துகள் கூறி வாழ்த்துவோம் நாங்கள்

**இலண்டன் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய வசந்த நவராத்திரி திருவிழா நிகழ்வில் சொற்பொழிவாற்றிய டாக்டர் திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்களுக்கு அன்று வழங்கி கௌரவித்து வாசித்தளித்த வாழ்த்துப்பா**

அற்புதமாயிங்கு அருள்மழைபொழியும்
கற்பக விநாயகர் கழலடி போற்றி
பொற்பதம் தூக்கிப்பெருநடம்செய்யும்
பரம்பொருள் சிவனொடு அம்மையைப்போற்றி

இந்து மதத்தின் தத்துவம் தன்னை
எழிலொடு கவினொடு எமக்காய்த்தந்து
விந்தை மிகுந்த சமய குரவர்கள்
விதந்த அற்புதம் வகைபடத் தந்து

கடவுளின் கண்களில் வழிந்த குருதியைக்
காலால்தடுத்துத்தன் கண்களை ஈந்த
வேடுவன் கண்ணப்பன் பாமரப் பக்தியை
மெச்சிப் பரவசம் பலவாய்க் கொண்டும்

கணவன் கேட்கக் கடவுளை வேண்டி
கனிவொடு மாங்கனி பெற்றுக் கொடுத்து
கைகளால் நடந்து கைலையை அடைந்த
காரைக்கால் அம்மையை பலவகை வியந்து

சிந்தை நிறைக்கும் பாடல்கள்பாடி
செவிதனும் குளிர்ந்து உளம்தனும் குளிர
விந்தைக் கருத்துடன் வகைபடுசுவையுடன்
வேதமுணர்தமிழ் பொருளொடு தந்து

எங்கள் உளத்தினில் தமிழொடு சைவம்
ஆழப்பதிக்கும் இலக்கினை நோக்கி
திங்களொன்றிங்கு தெவிட்டாத் தமிழ்
தந்த தாயே சாரதா அம்மையே வாழி!

சீமை வீதியில் ஊர்ந்திடும் தேரின்
சிறப்புகள் கூறி சிந்தை மகிழ்ந்து
தாமாய்த்தமிழொடு சைவம் இலண்டனில்
வளர்ந்திடும் என்று வாய்ச்சொல் அருளி
மங்கையர் இளையோர் ஆடவர் பெண்டிர்
பாலர் முதியோர் உளங்களை அறிந்து
பங்கமிலாத்தமிழ் பழரசச்சொட்டாய்

பருக்கினை பருகினோம் பரவசத்தோடு

கலைமாமணியே! செந்தமிழ் விறலியே!
நல்லாசிரியரே! திங்கள் சுடரே!
இலக்கிய மாமணி! முத்தமிழ் வித்தகி! திருமுறைச்செல்வியே!
அம்மையே உந்தன் பட்டம் கூறவே
எழிலாய்ப் பொழுதும் விடிந்திடும் அன்றோ!

இத்தனை தகைமைகள் இணையிலாக் கொண்டும்
கர்வமிலாத் தன் பண்பினைக் காக்கும்
பாங்கினைக்கண்டோம் நிறைகுடம் தளம்பிடாத்
தத்துவம் கண்டோம் வாழிய நீவிர்

சங்கர நயினார் கோயிலில் பிறந்து
சிறப்புடன் கற்று சித்திகள்பெற்று சிந்தை தெளிந்து
எங்கணும் தமிழும் சைவமும் வளர்ந்திட
ஏற்றமாய்ச்சேவைகள் செய்திடும் அம்மையே

நோய்தனைத் தீர்க்க நெடும் துயர் தணிக்க
ஆற்றல் பலபெற்ற நாயன்மார்கள்
பாடிய பாடல்கள் - வெறும் ஏடுகளல்ல
மந்திரங்கள் அதன் மகிமையை அறிந்து
நாமும் பாடி நன்மையடைவோம் என்ற
உம் கருத்துகள் நெஞ்சை நிறைத்தன

வீரமில் கல்வியும் செல்வமில் வீரமும்
வாழ்க்கைக்குதவா தென்றெமக்குரைத்து
கல்வியும் செல்வமும் வீரமும் ஒருங்கே
காத்திட வேண்டும் என்றும் உரைத்தனை

ஊற்றாய்ச் சுரந்த அமுதத்தமிழினை
வாட்டும் குளிரிலும் வகைபடத் தந்தனை
காற்றைக்கிழிக்கும் காந்தக்குரலினைக்
கேட்க மறந்து கேட்டோம் கருத்துகள்
ஆற்றல்மிகுந்த ஆளுமை கொண்டு
அள்ளித்தந்தனை சமுகக்கருத்துகள்- அன்னையே!
போற்றுவோம் உந்தன் பழுதிலாச் சேவை
பல்கிப்பெருகிடப் பெருகிட என்றே

நித்தமும் நாங்கள் நெறியுடன் துதிக்கும்
உத்தமி புதல்வனின் ஆசிகள் பெற்று
வாழிய வாழிய வாழிய என்று வாழ்த்துகள் கூறி
வாழ்த்துவோம் உங்களை

# பிறந்தநாள் TRT இன் பிறந்தநாள்

ஆம்
சின்னத்திரை ஒன்று சிங்கார வடிவெடுத்து
வண்ண அழகோடு வானலையில் வழிவந்து
கண்ணுக்கு குளிர்மை தந்து இன்றோடு ஓர்ஆண்டு

பிறந்தநாள் கொண்டாடும் சின்னத்திரைதனுக்கு
நிறைந்த வாழ்த்துக்கள் நெஞ்சார நான் அளித்தேன்
TRT என்னும் தமிழ் ஒளியும் ஒலியுமென்ற
தமிழச்சரமே நீயென்றும் தரணியிலே வாழ்ந்திடுவாய்

ஐரோப்பியத் தமிழரிடம் வீற்றிருந்து ஆரோக்கிய
நிகழ்ச்சிகளை அளிக்கின்றாய் நாடோறு ம்
தமிழ்மணக்க தமிழ்ஒலிக்க தமிழ்சிறக்க நீயளிக்கும்
தமிழ்நிகழ்ச்சி எல்லாம் தரமான தென்றுரைப்பேன்

புலம்பெயர்ந்து வாழ்கின்ற பைந்தமிழர் நெஞ்சமதில்
நிலையான ஓரிடத்தை நிறைத்திட்டாய் வருடமதில்
அன்னிய நாடுகளில் அவதரித்த எம் சிறார்கள்
அன்னியோன்னியமாக உன்னோடு ஐக்கியமுற

என்னமுமாய் ஒளிபரப்பி அவருள்ளம் மகிழ்வித்தாய்
சின்னத்திரையே உனை எப்படி நான் வாழ்த்திடுவேன்
ஈழத்தில் எம்மவர்கள் இன்னலுறும் வேளையெல்லாம்
நீளக்குரலெழுப்பி நம்மவரை விழிக்கவைத்தாய்

TRT யே என்றும் நீ
உண்மைக்கு உறுதிசெய்யும் இணையில்லா ஒளிபரப்பாய்
மண்காக்கும் வேங்கைகளின் மகிமைக்கு உரங்கூட்டும்
ஏற்றமுடன் நீசெய்யும் இணையில்லாப் பணிதனுக்கு
நாட்டமுடன் நாங்கள் நல்வாழ்த்து அளித்திடுவோம்

நிறைகூறி நானுன்னை நெஞ்சார வாழ்த்திடினும்
குறை சிலதும் கூறிடுவேன் கருத்தோடு கேட்டிடுவாய்
ஐரோப்பிய மண்ணில் அவதரித்த தமிழ் பாலகர்களின்-தமிழ்
ஆரோக்கிய முக்கியம் அதனை நீ உணர்த்திடுவாய்

தமிழினத்தைச் சீரழிக்கும் தரமில்லா சினிமாவை
அளவாக வானலையில் அனுப்பிடுவாய் இவர்க்காக
தமிழ்ப்பாடம் கற்கத் திசைதெரியா தமிழர்களின்
அமிழ்தான மழலைகட்கு ஊட்டிடுவாய் தமிழ்ப்பாடம்

திருக்குறளும் பேச்சும் பாடல்களும் நாட்டியமும்
விருப்பான மிருதங்கம் வயலின் புல்லாங்குழலும்
வாணிகரந்தந்த வீணையதும் எம்சிறுவர்
விருப்போடு பயில்வதற்கு வழிவகுப்பாய் வானலையில்

ஐரோப்பிய மண்ணில் அழருதமிழ் சிந்தாத
வாரஇறுதி தினம் வந்ததில்லை இதுகாலம்
கலைநிகழ்ச்சி தன்னின் கவினான நிகழ்வுதனை
அளவாக பதியவிட்டு அளித்திடுவாய் வானலையில்

# வானொலியே நீ வாழி!

ஸ்பெக்ரம் வானொலியில் சுகந்தமுடன் தவழ்ந்துவரும்
செந்தமிழே தமிழ்ச்சரத்தைச் சொரிந்திடுவாய் எம்மீது

வாரமோர் தடவை வருகின்ற ஞாயிறினில்
சோர்வில்லாத் தமிழ்மொழியைச் சொரிகின்ற தமிழலையே

பத்தோடு பதினொன்றாய் புவனத்தில் புலம்பாது
சத்தான நிகழ்வுகளைச் சிந்திடுவாய் வானலையில்

முத்தான கவித்துளிகள் முழுமையான நாடகங்கள்
சொத்தான எம்மவரின் சிறப்புரைகள் பட்டிமன்றம்

வித்தான பாலர்களை விருப்பூட்டும் பாலர்மன்றம்
நித்தியமாய் நடக்கின்ற நிகழ்ச்சிகளை நீகோர்த்து
ஒத்திகை பார்த்து உலவ வைப்பாய் வானலையில்

நாட்டு நடப்புகளை நன்றாக ஆராய்ந்து
போட்டு வைத்திடுவாய் பொழுதுபோகும் எம்மவர்க்கும்

ஆடவர்க்கும் அரிவையர்க்கும் ஆச்சியொடு அப்புவுக்கும்
தேடிநல்ல நிகழ்ச்சிகளை தந்திடுவாய் அவர்மகிழ

பிறந்தமண்ணை நாடோறும் நினைக்கின்ற பக்குவத்தை
உறங்கி நிற்கும் எம்மவரின் உள்ளத்தில் உணர்த்திடுவாய்

தாய்நாட்டின் பூபாளம்தரக்குன்றாத் தமிழ்மொழியை
ஆராய்ந்து அளித்திடுவாய் அவனியில் நாம் கேட்டிடவே

வாழ்த்துவது எம்போன்ற கவிஞர்களின் கடன்என்றால்
வார்த்தைகளைக் காப்பதுவுன் தலையாய கடமையன்றோ

# தாயகப் பற்றுடன் தமிழையும் வளர்ப்பீர்

BUDS என்னும் பெயரில் லண்டனில் இயங்கும்
கீழ்த்திசை ஈழவரே
நிச்சயம் உங்கள் சேவையை ஈழச்
சரித்திரம் எழுதிடுமே
மணிவிழாக்கண்ட மணித்தமிழ்க் கலைஞன்
மாண்புடன் இருக்கும் மாஸ்டர் சிவலிங்கம்
போன்றோர் எம்மிடை பிறந்தது எங்கள்
சான்றோர் செய்த தவப்பலன் அன்றோ
ஆண்டுக் கோர்முறை ஆடியும் பாடியும்
அங்கொரு பணம் சேர்த்தீர்
மாண்புடன் கீழத்திசை பல்கலைக் கழகம்
உயர்ந்திட வழிசெய்தீர்
மீண்டீர் இம்முறை விபுலானந்தர்
விழாவினை நடாத்திட்டீர்
மட்டு நகரின் மாண்பினை மெச்சும்
கலைகளை ஏன் மறந்தீர்
நாட்டுக் கூத்துக்கள் நற்றமிழ்க் கவிதைகள்
நலிவுடன் அழிவது மேன்
வீட்டுக் கவிகளால் மாறிடும் இவைகள்
வெளிவரல் முறையன்றோ
வாரமோ ரரங்கம் ஏறிடும் பாலர்
வாழ்ந்திடும் லண்டனிலே
நேரமோ இல்லை நம்மவர் வந்து
நடத்துவர் விழாக்களினை

மீனிசை நாட்டுக் கீழ்த்திசைத் தோழரே
கடந்ததை மறந்து நடப்பதை நோக்கின்
திடமொடு கிழக்கின் அரும்பெரும் கலைகள்
அரங்கம் ஏறி அவைபயன் தரட்டும்

வாழிய BUDS இன் அமைப்புச் குழுவினர்
வாழிய விபுலர் தமிழ்ப்பணிச் சேவை
வாழிய வடக்கின் கிழக்கின் உறவுகள்

வாழிய செந்தமிழ்க் கலைகள் எங்கனும்

# சண்றைசுக்கு வாழ்த்து

திங்கள் தொறும் தெவிட்டாது தேன்மழையைப் பொழிகின்ற
எங்களூரும் சன்றைசே உந்தனுக்கு எம் வாழ்த்து
மங்களமாய் உன்சேவை மனம்நிறையத் தொடர்ந்திடவே
பங்கமிலா எம் பங்கை பணிவுடன்நாம் தந்திடுவோம்

அறுபத்து நிமிடமதில் எழில்சுவையை எமக்கூட்டி
ஒருபத்து நாட்களுக்கு உன்னினைவாய் இருந்திடுவோம்
நக்கீரன் நவின்றதைப்போல் நான்குறைகள் கூறவில்லை
எக்கணமும் உன்னுயர்வில் அக்கறையாய் இயம்புகின்றேன்

சினிமாவின் மோகத்தால் நீசிந்து பாடுவதை
இனியாகிலும் குறைத்து கர்நாடகம் இசைப்பாய்
உறவினர்கள் பெயரினிலே உரைக்கின்ற பட்டியலால்
உறக்கம்தான் வருகிறது உணர்ந்திடுவாய் சண்றைசே

இசைகதைகள் கவியரங்கம் இனிமைமிகு நாடகங்கள்
அசைபோடும் உளத்திற்கு அருமருந்தாய் ஆகிடுமே
சிறுகுறிப்புும செய்திகளும் சிந்தனைக்கு விருந்தளிக்கும்
விறுவிறுப்பாய் சிறார்குரல்கள் விருந்தாக அமைந்துவிடும்

விஞ்ஞான வளர்ச்சிகளும் வெளிநாட்டு நடப்புகளும்
விதம்விதமாய் நீயமைத்து வானலையில் கலக்கிவிடின்
இதமாயெம் செவிகளிலே இன்னிசையாய்ப் பரவிடுமே
மிதமாகத் தந்துவிட்டேன் மகிழ்வோடு ஏற்றிடுவோய்

## வாழிய வாழியவே

வோல்தம் பொறஸ்டார் வளர்த்த தமிழ்ச்சங்கம்
வாழிய வாழியவே
நால்திசை தமிழை நலமுடன் பரப்பி
நற்புகழ் பெற்றிடுவீர்

இலண்டனின் கிழக்கில் இங்கிதமாய் நீர்
இயலிசை பரப்பிடுவீர்
கலங்கிடும் பாலரைக் கவினுறு தமிழில்
கற்றிடச் செய்திடவீர்

சுழன்றிடுமும் பரதமும் சிறந்தநல் இசைவகை
சிரத்தையாய்ப் புகட்டிடுவீர்
வளர்ந்திடு உடல்நல விளையாட்டு வகைகளை
விருப்புடன் பழக்கிடுவீர்

பாலர்முதல் பெரியோர்கள் வரை
படைக்கின்றீர்(படிக்கின்றீர்) அலைஓசை
சாலச் சிறந்ததோர் செய்திச்சஞ்சிகை
சிறப்புடன் அளித்திடுவீர்

மாதர் நலன்கள் சிறந்திட இங்கே
மகளிர் அணிசேர்த்தீர்
போதிய ஆற்றலும் பொலிவுறு வளங்களும்
புகழுடன் சேர்த்தீர்

வாழிய உங்கள் வளம்மிகு சேவை
வையகம் போற்றிடட்டும்
வாழிய உங்கள் வனப்புறு ஒற்றுமை
வையகம் புகழ்ந்திடட்டும்.

# மடமையை ஒழிப்போம்

தலைவன் இறந்தவுடன் தாமும் அத்தீயில் வெந்து
தன்னுயிர் மாய்க்கும் எங்கள் தலைவியர் கண்டோமன்று

கண்ணகி வழியில் வந்த கற்புடைப் பெண்கள் என்று
எண்ணிநாம் போற்றி வந்தோம் அதுஒரு காலந்தானே

கற்பினைக் காட்டவென்று குளித்தனர் தீயின் உள்ளே
பொற்புடை மாந்தர் செய்த பெருமையும் பேசி நின்றோம்

ஆண்டுகள் பலவும் ஓடி ஆண்களின் சமமாய் நின்று
மாண்பொடு கடமையாற்றும் மிலேனியம் காலந்தன்னில்

கணவனின் இறப்பின்போது காதலால் மனைவி தானும்
பிணத்தின் மேல் தாலிதன்னை போட்டிட வற்புறுத்தும்

அரக்கர்கள் கூட்டம் முன்னே ஆறுதல் சொல்வாராரோ
உரக்கவே துயரால் விம்மும் உத்தமி என்ன செய்வாள்

புதுயுகம் தன்னில் வாழும் பைந்தமிழ் மக்கள் நாங்கள்
மடமையைப் போக்கி அவர்தம் மனத்தின்நோ காயவைப்போம்

திரைப்படங்களிலே சோகம் தேவையாய்க்கருதி அங்கு
விதவையின் வளையல் தன்னை வெறுப்புடன் உடைக்கும் காட்சி

வாழ்க்கையில் ஏற்கஒண்ணா வதையெனச் சொல்வேன் இங்கு
பாழ்படும் மூடநம்பிக்கை போக்கியே நாமும் வாழ்வோம்



ஜே.ஆர் அச்சகம் லண்டன் தொ.இல 0208503 6643